பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 03 வெள்ளிக்கிழமை 19.08.2022 கதிர் 286

**இனி இது ரகசியம் அல்ல!**

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செல்வாக்கில் – கடைக்கண் பார்வையில் – வவுனியாமாவட்டத்தில்ஈ.பி.டி.பியின் எம்.பியானவர் திலீபன். இப்போதுதெரிந்தோ,தெரியாமலோ அமைச்சர் டக்ளஸிற்கே 'ஸேம் சைட் கோல்'

2






# கண்ணீர்ப் புகைக் குண்டு வீசி, நீர்த் தாரைப் பிரயோகித்து கொழும்பில் பல்கலை மாணவர்கள் போராட்டம் கலைப்பு!

அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றிய மாணவர்களினால் நேற்றுக் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தைக் கலைப்பதற்காக பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை பிரயோகம் மற்றும் நீர்த் தாரைப் பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'உரிமைக்காக கொழும்புக்குச் செல்வோம்!' எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அடக்குமுறையை நிறுத்துவதுடன், கைது செய்யப்பட்ட அனைத்துப் போராட்டக்காரர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டிருந்தது.

அத்துடன், 'நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை உடனடியாக இரத்து செய்', 'மக்கள் சக்தியை உறுதிப்படுத்தும் புதிய அரசமைப்புக்காகப் போராடுவோம்', 'இனிக் கடன் இல்லை', 'திருடப்பட்ட பணத்தைத் திருப்பிக் கொடு!', 'பொருள்களின் விலை – வரிச் சுமையைத் தாங்க முடியாது', '3 வருடங்களாக முடங்கிக் கிடக்கும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை

4

# சர்வ கட்சி அரசு 'அவுட்! தேசிய அரசு வருகின்றது

**சர்வகட்சி அரசாங்கத்திற்குப் பதிலாக தேசிய அரசாங்கத்தை நிறுவுவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார். சர்வகட்சி அரசாங்கத்தில் கட்சிகளாக இணைவதை விடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியாக அரசாங்கத்தில் இணைந்து கொள்வதால் தேசிய அரசாங்கத்தை அமைப்பதே பொருத்தமானது என அரசியல் கட்சிகள் அவரிடம் சுட்டிக்காட்டியுள்ளன.**

2

## பல்கலை மாணவர் ஒன்றிய தலைவர் முதலிகே கைது!



அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை கைது செய்யுமாறு ஏற்கனவே நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்

2

## 22ஐ ஆட்சேபித்து ஒன்பது மனுக்கள்

அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் 9 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2

# புதிய 3 மாடிக் கட்டடம் அறிவியல் நகரில் திறப்பு




கிளிநொச்சி – அறிவியல் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் நேற்று காலை 10 மணியளவில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 52 கோடி ஐம்பது லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட

4

## பெற்றோலை 250 ரூபாவுக்கு விற்கலாம் என்கிறார் சம்பிக்க

உலக எண்ணெய் விலையைப் பார்க்கும் போது ஒரு லீற்றர் பெற்றோல் இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு வழங்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை மிகவும் குறைந்து வருவதாக தெரிவித்த அவர், 120 டொலராக இருந்த பீப்பாய் தற்போது 92 டொலராகக் குறைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மசகு எண்ணெய் விலை குறைவதால் நுகர்வோருக்கு பலன் கிடைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எண்ணெய் விலை தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்த கருத்து உண்மையெனத் தெரிவித்த பாட்டலி சம்பிக்க ரணவக்க, நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடிக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் காரணம் எனவும் தெரிவித்தார்.

2

## அடுத்த மாதம் ரணில் ஜப்பான் செல்கிறார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் ஜப்பானுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இதன்போது ஜப்பான் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளார் எனவும், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அதிக

4

## கைதான மேர்வின் சில்வா பிணையின்றியே விடுவிப்பு

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவைப் பிணையில் விடுவிப்பது அவசியமில்லை எனவும், அடுத்த நீதிமன்றத் தினத்தில் – நவம்பர் 16 ஆம் திகதி – நீதிமன்றில் முன்னிலையானால் போதுமானது எனவும் கொழும்பு மேலதிக நீதிவான் கேமிந்த பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

2



## அடுத்த மாதம் பணவீக்கம் உச்சமாகும்

இலங்கையின்பணவீக்கம் செப்டெம்பர் மாதத்தில் உச்சத்தை எட்டவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். மத்திய வங்கியில் உள்ள கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2

## இனி இது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடித்திருக்கின்றார்.

வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா மீது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செம கடுப்பில் இருக்கின்றார் என்பது உலகறிந்த இரகசியம். ஜீவன் தியாகராஜாவை அந்தப் பதவியில் இருந்து கிளப்புவதற்கு எல்லா வழிவகைகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடி இருக்கின்றார் என்பதும் தெரிந்ததே.

அரசின் மேலிடத்திற்கு இந்த விடயத்தை ஒட்டி பல நீட்டோலைகளை டக்ளஸ் தரப்பு சமர்ப்பித்து வருகின்றது.

ஆனால் அந்த விடயம் ஒன்றும் தெரியாதவர் – புரியாதவர் – போல 'ஸேம் சைட் கோல்' அடித்திருக்கிறார் டக்ளஸின் கட்சி எம்.பியான திலீபன். ஆளுநர் தொடர்பில் தமது கட்சித் தலைவரின் நிலைப்பாடு திலீபன் எம்.பிக்குத் தெரியாதோ என்னவோ...? எங்கள் பத்திரிகையை ஒழுங்காக வாசித்து இருந்திருந்தால் கட்டாயம் தெரிந்திருக்கும்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசிய கூட்டமைப்பு எம்.பியான ஸ்ரீதரன், வடக்கு ஆளுநர் தியாகராஜாவை ஒரு பிடி பிடித்து இருந்தார்.

தமிழில் தம் பெயரை வைத்துக் கொண்டு விட்டு தமிழில் பேசாமல் ஆங்கிலத்தில் பேசுபவர் என்று ஆளுநரை ஒரு வாங்கு வாங்கி இருந்தார் ஸ்ரீதரன் எம்.பி.

இதையொட்டி, கூட்டமைப்பின் ஸ்ரீதரன் எம்.பியைத் தாம் தாக்குகின்றார் என்று நினைத்துக் கொண்டு தமது கட்சி தலைவரின் நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறாகப் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டு ஆளுநருக்கு நற்சான்றிதழ் வழங்கி இருக்கின்றார் திலீபன் எம்.பி.

தமக்கு எதிராக அமைச்சர் டக்ளஸ் தரப்பு சமர்ப்பித்திருக்கும் குற்றச்சாட்டுப் பத்திரங்களுக்கு பதிலடியாக அமைச்சர் டக்ளஸின் கட்சியைச் சேர்ந்த திலீபன் எம்.பி. தமக்கு அனுப்பிய நற்சான்றுப் பத்திரங்களை – நன்றிக் கடிதங்களை – ஆளுநர் ஜீவன் தியாகராஜா சமர்ப்பித்தாலே போதும், அவர் தவறு செய்யாதவர் என்றாகிவிடும் என நான் நினைக்கிறேன்.

வடக்கு ஆளுநர் தொடர்பில் அப்படி என்ன நற்சான்றுப் பத்திரங்கள் திலீபன் எம்.பி. வழங்கியுள்ளார்?

இதற்கு என் செய்தியாளர் அனுப்பிய செய்தியைக் கீழே தருகிறேன். வாசகர்களே முடிவு செய்யட்டும். செய்தி இதுதான்:–

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது வடமாகாண ஆளுநர் தொடர்பில் திலீபன் எம்.பியிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போது திலீபன் எம்.பி. தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு மாகாணத்திற்கு புதிய ஆளுநர் நியமிப்பது தொடர்பில் நான் கேள்விப்படவில்லை. ஸ்ரீதரன் அவர்கள் கடந்த முறை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது வடமாகாண ஆளுநர் தமிழில் தம் பெயரை வைத்துக் கொண்டு ஆங்கிலத்தில் உரையாற்றுகிறார் என ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். நான் அவரிடம் ஒரு விடயத்தைக் கேட்க விரும்புகின்றேன். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள – தமிழில் பெயரைக் கொண்ட – இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தமிழில் உரையாற்றுவதில்லை. முதலில் அவர் அதனைத் திருத்த வேண்டும். பல அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போதைய ஆளநருடன் முரண்பாடுகள் இருக்கிறன. ஆனால் என்னைப் பொறுத்த வரை தற்போதைய வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா எமது மாவட்டம் தொடர்பாக சிறப்பாக செயற்படுகிறார்.

முன்னாள் ஆளுநர் சாள்ஸ் அவர்களுக்கு எமது மக்களது பிரச்சினைகள் தொடர்பில் 150 இற்கு மேல் கடிதம் எழுதினேன். இதுவரை எந்த விதப் பதிலும் கிட்டியதில்லை. வேலையும் நடக்கவில்லை. ஆனால் தற்போதைய ஆளுநருக்குக் கடிதம் அனுப்பினால் பதில் வருகிறது. வேலையும் நடக்கிறது. அதனால் நான் 50 இற்கு மேற்பட்ட நன்றிக் கடிதங்களை கூட அனுப்பியுள்ளேன். தற்போதைய ஆளுநர் சிறந்த முறையில் செயற்படுகிறார். – எனத் தெரிவித்தார்.

இனி முடிவு செய்ய வேண்டியவர்கள் வாசகர்களதான்..!

– மின்னல் –

## பல்கலை மாணவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்றுக் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட பேரணி மீது கொழும்பு யூனியன் பிளேஸ் பகுதியில் வைத்து பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைத் தாக்குதலை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தப் போராட்டத்தில் காணப்பட்ட வசந்த முதலிகே, போராட்டத்தில் களேபரம் ஏற்பட்டமையை அடுத்துப் பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு அங்கிருந்து நழுவினார் எனக் கூறப்படுகின்றது.

எனினும், கொழும்பு – யூனியன் பிளேஸ் பகுதியில் பேரணியில் ஈடுபட்டுத் திரும்பிய போது, கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிஸாரிடம் சிக்காமல் தப்பிச் சென்ற வசந்த முதலிகே பின்னர் விசேட பொலிஸ் குழுவினால் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் அறிக்கையொன்றிலும் தெரிவித்துள்ளனர்.

வசந்த முதலிகேவிற்கு அடைக்கலம் கொடுத்த சிலாபம் பல்லம வதுபொல பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் கூறப்பட்டது.

## 22ஐ ஆட்சேபித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு, குணதாச அமரசேகர உள்ளிட்ட பிரஜைகள் 9 பேரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

## அடுத்த மாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் அவர் கூறியவை வருமாறு:–

இந்தப் பணவீக்கம் மின் கட்டண மாற்றங்களால் படிப்படியான உயர்வாக இருக்கும். முன்னர் அறிவித்தது போல பணவீக்கம் 70 வீத அளவை எட்டாது.

மேலும், இலங்கை மத்திய வங்கி 2022 ஆம் ஆண்டிற்கான பணவீக்கத்தின் வேகம் எதிர்பார்த்ததை விட வேகமாக, மிதமானதாக இருக்கும் என அதன் நாணயக் கொள்கை மீளாய்வுப் பிரிவு கூறியுள்ளது.

செப்டெம்பர் மாதத்தில் உச்சத்தை எட்டவுள்ள பணவீக்கம் அதற்கு அடுத்தடுத்த மாதங்களில் குறைவடையும். – என்றார்.

## கைதான மேர்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களனிப் பிரதேசத்தில் மாடு வெட்டுவதைத் தடுத்து நிறுத்திய சந்தேகநபருக்கு பிணை தேவையில்லை என நீதிவான் திறந்த நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன் பின்னரே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் பலவந்தமாக நுழைந்து சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மேர்வின் சில்வா அதற்காக நேற்றுக் குற்றப்புலனாய்வு பிரிவினரால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் சாட்சியங்களை சமர்ப்பித்ததுடன், 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கைகளை சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## சர்வ கட்சி அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் தேசிய அரசு அமையும் பட்சத்தில் அமைச்சுப் பதவிகளின் எண்ணிக்கையை முப்பதிலிருந்து நாற்பத்தி இரண்டாக அதிகரிக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய அமைச்சரவை அடுத்த வாரம் பதவியேற்கவுள்ளதாக ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# திருமறைக் கலாமன்ற மாணவியின் நாட்டிய அரங்கேற்றநிகழ்வு நாளை!

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவியும், நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவியுமான செல்வி எறின் கிளன்சியா கிளன்சியஸ் லொயலாவின் பரதநாட்டிய நாட்டிய அரங்கேற்றம் நாளை (சனிக்கிழமை) பி.ப.2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவர் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடனக் கலையை பயின்று அரங்கேற்றத்தை மேற்கொள்கின்ற ஆறாவது மாணவியாவார்.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக லண்டன் சலங்கை நர்த்தனாலயா நுண்கலைக் கல்லூரியின் இயக்குநர் கலாநிதி ஜெயந்தி யோகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை நடனத்துறை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன், யாழ். கல்வி வலய நடனபாட ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி துஷ்யந்தி துஷிதரன், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை பிரதி அதிபர் திருமதி அக்னஸ் செல்வராணி சத்தியசீலன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அணிசெய் கலைஞர்களாக ஸ்ரீமதி சுதர்சினி கரன்சன் நட்டுவாங்கம், நடன அமைப்பினையும், யாழ்.பல்கலைக்கழக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தின் இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் இசைமாணி தவநாதன் றொபேட் குரலிசையையும், மிருதங்க ஞான வாரிதி சி.துரைராஜா மிருதங்க இசையையும், சுருதி வேந்தன் அ.ஜெயராமன் வயலின் இசையையும் வழங்கி அரங்கேற்றத்துக்கு அணிசெய்யவுள்ளனர்.

## பெற்றோலை 250...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டொலர் கட்டணத்தை செலுத்தாமையால் நாடு நெருக்கடிக்கு உள்ளாகியதாகவும், அது தொடர்பில் இதுவரையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நெருக்கடியை ஏற்படுத்தி பலகோடி ரூபா சுரண்டப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## காணவில்லை

தொண்டைமானாறு, வல்லை ரோட் இல் வசிக்கும் மயில்வாகனம் குருமூர்த்தி (வயது75) அவர்களை கடந்த இரண்டு நாளகளாக (17ஆம் திகதி முதல்) காணவில்லை. இவரைக் கண்டவர்கள் உடன் அறியத்தரவும். கடைசியாக நீல நிற சாரம், நீல நிற ரிசேர்ட் அணிந்திருந்தார்.



**தொடர்பு இலக்கங்கள்:**
**0753996654**
**0774206565**
**0770780778**

## இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளிநாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும்போது தான் தொழில் தகமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் (welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் (Hospitality workers) உலகின் பல நாடு களில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய jananyakam.associates@gmail.com என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.



# யாழ்.போதனாவுக்கு அங்கஜன் விஜயம்!



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நெருக்கடி கால செயற்பாடுகள் மற்றும் உள்ளக நிலைவரங்களை ஆராயும் விதமாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வைத்தியசாலைக்கு சென்றிருந்தார்.

யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தியைச் சந்தித்த அவர், வைத்தியசாலை நிலைமைகளை ஆராய்ந்ததோடு, வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதன்போது வைத்தியசாலை எதிர்கொள்ளும் இடப்பற்றாக்குறை, நோயாளர் விடுதிகளின் விஸ்தரிப்பு, மேலதிக சிகிச்சை மையங்களின் தேவைகள், வைத்தியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான வசதிகள் தொடர்பாகப் பணிப்பாளரால் எடுத்துரைக்கப்பட்டது.

வைத்தியசாலைக்குத் தேவையான இணைந்த சேவைகளை வழங்கும் மையங்களை உருவாக்குதல், வைத்தியசாலையின் உள்ளக மற்றும் வெளியக விஸ்தரப்பு பணிகள் என்பன எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அவற்றுக்கான பூர்வாங்கப் பணிகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் உரையாடப்பட்டன.

மேலும், வைத்தியசாலைக்கு அண்மித்துள்ள நிலங்களை உரிமையாளர்களிடம் கோரிப்பெற்று, புலம்பெயர் கொடையாளிகளின் உதவியோடு வைத்தியசாலைக்குத் தேவையான பிரிவுகளை அமைக்க முடியும் எனவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், யாழ் நகரப்பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டமொன்றை, போதனா வைத்தியசாலைக்கு பயன்சேர்க்கும் வகையில் முன்னெடுப்பது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

இதுதொடர்பான திட்டமுன்மொழிவை உருவாக்கும் நோக்கில் முத்தரப்பு சந்திப்பொன்றை விரைவில் நடத்தத் தீர்மானித்துள்ளதாக அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள்மற்றும்தாதியர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், ஆளணியை அதிகரிப்பது தொடர்பிலும் உரையாடப்பட்டதுடன், இலங்கை தாதியர் சேவையில் 95 வீதம் பெண்கள், 5 வீதம் ஆண்கள் என்ற ஆட்சேர்ப்பு வீதத்தில் கொள்கைரீதியான மாற்றம் கொண்டுவரப்படுகையில் ஆண் தாதியர்களை அதிகமாக சேவையில் உள்ளீர்க்க முடியும் எனவும் இந்தச் சந்திப்பில் யோசனை முன்வைக்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் சிறுமிகள் இருவர் கடத்தப்பட்டுத் துஷ்பிரயோகம்!

## 7 பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணத்தில் 17 வயது சிறுமிகள் இருவரை கடத்திச் சென்றமை மற்றும் தகாத செயலில் ஈடுபட்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் பஸ் சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் உட்பட ஐவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், வீட்டைவிட்டுவெளியேறி குற்றச்செயலில் ஈடுபட்ட சிறுமிகள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இந்த கைது நடவடிக்கை செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிலையில் சிறுமிகள் இருவரும் குற்றஞ்சாட்டப்பட்ட ஐவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் புதன்கிழமை முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இரண்டுவாரங்களுக்கு முன்னர்புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமிகள் இருவர் வீட்டிலிருந்து வெளியேறி வந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்துள்ளனர். அவர்கள் தொடர்பில் அறிந்த ஆண் ஒருவர், சிறுமிகள் இருவரையும் அழைத்துச் சென்று சாவகச்சேரியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

எனினும் அந்த விடுதியிலிருந்து வெளியேறிய மூவரும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு வந்துள்ளனர். அன்றைய தினம் இரவு பஸ் சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் என மேலும் நால்வர் இணைந்து வாகனம் ஒன்றில் எழுதுமட்டுவாழ் பற்றைக் காட்டுக்குள் சிறுமிகளை அழைத்துச் சென்றுள்ளனர்.

அதன்போது சிறுமி ஒருவர் சாதுரியமாகப் பேசி வாகனத்திலிருந்து இறங்கி எழுதுமட்டுவாழில் மக்கள் வாழும் பகுதிக்கு வந்துள்ளார். வீதியில் சென்றவர்களிடம் நடந்தவற்றையும், தான் தப்பி வந்ததையும் தெரிவித்த நிலையில் பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மற்றைய சிறுமியுடன் சென்ற ஐவரும் மறுநாள் யாழ்ப்பாணம் நகருக்கு அழைத்து வந்து சிறுமியை இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது சிறுமிகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களை கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், வீட்டைவிட்டு வெளியேறி வந்து துர்நடத்தையில் ஈடுபட்டமையால் இரு சிறுமிகளுக்கும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# நாடு கடத்தப்பட இருந்த ஸ்கொட்லாந்து யுவதி மாயம்

## விசாரணைகள் ஆரம்பம்!

நாடு கடத்தப்படவுள்ள ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த கெய்லி பிரேசர் என்ற யுதவியை கண்டுபிடிக்க முடியவில்லை என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அவரைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

தம்மை இலங்கையில் இருந்து நாடு கடத்துவதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் எடுத்த தீர்மானத்தை இரத்து செய்யுமாறு கோரி கெய்லி பிரேசர் செய்த விண்ணப்பத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

குடியகல்வு மற்றும் குடிவரவு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்குக் காரணம் கூறாமல் வீசாவை நிறுத்தவோ அல்லது ரத்து செய்யவோ உரிமை உள்ளதாகவும், உச்ச நீதிமன்றமும் வழங்கிய தீர்ப்புகளாலும் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் நீதிமன்ற மேன்முறையீட்டு நீதியரசர் குறிப்பிட்டிருந்தார்.

சமூக ஊடகங்களில் போராட்டம் தொடர்பான தகவல்களை வெளியிட்ட ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த கெய்லி ஃப்ரேசருக்கு வழங்கப்பட்ட விசாவை நிறுத்த குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் கடந்த 10 ஆம் திகதி தீர்மானித்திருந்தது.

அத்துடன், 15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையை விட்டு வெளியேறுமாறு குறித்த திணைக்களம் அவருக்கு அறிவித்திருந்தது.

கெய்லி பிரேசரின் மனு நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் மாயமாகியுள்ளமை தற்போது சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது.

# மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு; உயிராபத்தை எதிர்நோக்கும் நோயாளர்

இலங்கையில் பாரியளவில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும், இதனால் நோயாளிகள் உயிராபத்தை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சத்திர சிகிச்சைகளின் போது பொதுவாகப் பயன்படுத்தும் மயக்க மருந்து வகைகளுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் இதனால் நோயாளர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சத்திர சிகிச்சை கருவிகள், வலி நிவாரணிகள், புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்து வகைகள், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சிறுவர்களுக்கான மருந்துப் பொருள்களுக்கு கடுமையான பற்றாக்குறை நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

இதனால் ஒட்டுமொத்த வைத்தியசாலை கட்டமைப்பே சீர்குலைந்து போகும் அபாயம் உருவாகியுள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மருந்தகங்களில் மருந்துப் பொருள்களின் விலைகள் நான்கு மடங்காக உயர்வடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலை, தேசிய கண் வைத்தியசாலை உள்ளிட்ட நாட்டின் பிரதான வைத்தியசாலைகள் பலவற்றில் சத்திர சிகிச்சைக் கருவிகள் மற்றும் மருந்துப் பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்குத் தேவையான இரசாயனங்கள் இல்லாத காரணத்தால் சத்திர சிகிச்சைகளை ஒத்திவைக்க நேரிட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் நோயாளிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என அவர் தெற்கு ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு விமான நிலையத்தில் தனி நுழைவாயில்!

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கைப் பணியாளர்கள் விமான நிலையத்துக்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் விசேட நுழைவாயில் திறக்கப்படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி இந்த விசேட நுழைவாயில் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கை பணியாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்களைத் தவிர்ப்பதே இதன் நோக்கம் என அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும், இதன் மூலம் சுற்றுலா விசா மூலம் வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்பவர்களை அடையாளம் காண முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரண்டு காற்றாலை மின் திட்டங்களுக்கு அதானி கிரீன் எனர்ஜிக்கு தற்காலிக அனுமதி

## அமைச்சர் காஞ்சன தகவல்

50 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் பெறுமதியான இரண்டு காற்றாலை மின் திட்டங்களுக்கு அதானி கிரீன் எனர்ஜிக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய மன்னாரில் 286 மெகா வாட் மற்றும் பூநகரியில் 234 மெகாவாட் காற்றாலை மின் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சந்தி சிரிக்கும் நீதி

‘நீதி நிலை நாட்டப்படுவது மட்டுமல்ல, நிலை நாட்டப்படுவது போலக் காட்டப்படவும் வேண்டும்.’ – என்பது நீதித்துறை தொடர்பான மகா வாக்கியங்களில் ஒன்று.

அது இலங்கையின் நீதித்துறையில் பின்பற்றப்படுகின்றதா என்று கேட்டால் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

இதேபோல, நீதித்துறையில் இன்னொரு மகா வாக்கியமும் உண்டு. அது ‘தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகி விடும்.’ – என்பது.

நேற்றுக் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் எடுத்த ஒரு நடவடிக்கை இலங்கையின் சட்ட அமுலாக்கல் மற்றும் நீதித்துறை தொடர்பில் மேற்படி இரு மகா வாக்கியங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கத் தூண்டுகின்றது.

2007 டிசெம்பர் 27ஆம் திகதி – 15 ஆண்டுகளுக்கு முன்னர் – நடந்த ஒரு சம்பவத்துக்காக இவ்வளவு காலமும் தூங்கிக் கொண்டிருந்த குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் சட்டமா அதிபர் திணைக்களமும், இப்போது சம்பந்தப்பட்ட பிரமுகரை குற்றப் புலனாய்வுத்துறைப் பிரிவுக்கு வரும் படி அழைத்து, அங்கு வைத்து அவரைக் கைது செய்து, நீதிமன்றுக்குக் கொண்டு சென்றிருக்கின்றது.

பதினைந்து வருடத்துக்கு முந்திய சம்பவம் என்பதானாலோ என்னவோ நீதிமன்றமும் பிணை வைக்கக் கூட கோராமல் வழக்கை நவம்பர் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்து பிரமுகரையும் அனுப்பி விட்டது. ஆக, பதினைந்து வருடங்களுக்கு முந்திய வழக்கில் இன்னொரு மூன்று மாதத்துக்கு அல்லது ஆறு மாதத்துக்கு ஒரு தடவை அவர் நீதிமன்றப் பக்கம் தலை காட்டுவதுடன் வழக்கு இழுபட்டு அதுவாகச் செத்து விடும். இதுதான் இலங்கையின் சட்ட அமுலாக்கல் மற்றும் நீதித்துறையின் சீத்துவம்.

பதினைந்து வருடத்துக்கு முன்னரான சம்பவத்துக்காக இப்போது கைதாகி ஒரு சில மணி நேரத்தில் நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்திருக்கும் பிரமுகரும் சாதாரண நபர் அல்லர். அவருக்கு எதிரான அந்தக் குற்றச் சம்பவமும் சாதாரணமானதல்ல.

அந்தப் பிரகிருதி சர்சைக்குரிய முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா. 2007ஆம் ஆண்டு சிறிலங்கா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் பலவந்தமாகப் புகுந்து, பணியாளர்களை அச்சுறுத்தி, சிறு காயங்களை ஏற்படுத்தியமை மற்றும் சட்ட விரோதமாக ஒன்று கூடியமைதான் அவர் மீது அப்போது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு.

இதை ஒட்டி இப்போதுதான் சட்டமா அதிபரின் ஆலோசனை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்திருக்கின்றதாம். அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள்.

என்னே சுறுசுறுப்பு..! என்னே வேகம்.. ! இனியும் கூட இந்த ஆமை வேகம் இந்த விடயத்தில் தொடரும் என்பது நிச்சயம். ஏனென்றால் இதுதான் இலங்கை நீதித்துறையின் பண்பியல்புப் போக்கு.

அரச ஊடகத்துக்குள் புகுந்து இதே வேலையை கடந்த ஜூலை 9ஆம் திகதியை ஒட்டிப் புரிந்த வரை ஒரு சில நாள்கள் கழித்து அவர் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்க இருக்கையில் விமானத்துக்குள் இருந்து அவர் கத்தக் கத்த தரதரவென்று இழுத்து வந்ததும் இதே சட்ட அமுலாக்கல் துறைதான்.

ஆனால் அது வேறு, இது வேறு. ஏனென்றால் இதுதான் இந்த நாட்டின் நீதிமுறைமை.

# பஷீர் சேகு தாவூத்தை கிழக்கின் ஆளுநராக்குக!

## இலங்கை மக்கள் தேசியக் கட்சி வலியுறுத்து



கிழக்கு மாகாண ஆளுநராக, முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத்தை நியமனம் செய்ய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் என்.விஷ்ணு காந்தன் அறிக்கையொன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையொன்றில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு –

கிழக்கு மாகாண ஆளுநராக கிழக்கு மண்ணையும், இங்கு உள்ள மக்களையும் நேசிக்கின்ற கனவான் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும். அதேபோல அவர் இங்கு வாழ்கின்ற அனைத்து இன மக்களாலும் நேசிக்கப்படுபவராக இருத்தல் வேண்டும்.

எமது கட்சியைப் பொறுத்த வரை கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை அலங்கரிப்பதற்கு உண்மையிலேயே மிகப் பொருத்தமானவர் முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத். இவர் எல்லா இன மக்களையும் அரவணைத்து நடப்பவர்.

எல்லா இன மக்களாலும் நேசிக்கப்படுபவர். குறிப்பாக தமிழ், முஸ்லிம் உறவுக்குப் பாலமாக விளங்குபவர். தமிழ் மக்கள் மூலமாக முதன்முதல் நாடாளுமன்றம் சென்றவர்.

தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளுக்கு எப்போதும் குறுக்கே நிற்காதவர். இவர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படுகின்ற பட்சத்தில் இந்த மாகாணத்தில் இன நல்லிணக்கம் செழிக்கும். குறிப்பாக தமிழ், முஸ்லிம் உறவு மேம்படும்.

நாடாளுமன்ற அரசியலில் மிக நீண்ட அனுபவம் உடைய இவரின் தெளிந்த சிந்தனை, தீர்க்கதரிசனம், தூர நோக்கு ஆகியவற்றின் மூலம் கிழக்கு மாகாணம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் பெறுவது திண்ணம்.

இவர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படுவதை எந்த மக்களும் ஆட்சேபிக்கப் போவதில்லை. எனவே ஆளுநராக இவரையே நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோருகின்றோம்.

நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை தற்போது கொண்டிருக்காத அரசியல் கட்சிகளையும் சர்வகட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதி இணைத்து கொண்டு பயணிக்க வேண்டும் என்பது தமது பேரவா.

பசீர் சேகு தாவூத்துக்கு வழங்கப்படுகின்ற கிழக்கு மாகாண ஆளுநர் பதவி மூலம் எமது பேரவா நிறைவேறத் தொடங்கும் என்று விசுவாசிக்கின்றோம். இதுவே எமது கட்சியின் சிபாரிசாகும்’. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கோட்டாவின் புகைப்படத்தை அகற்றிய பொதுஜன பெரமுன!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக சந்திப்புகளின் போது பின்னணியில் காட்சிப்படுத்தப்படும் கட்சியின் உத்தியோக பூர்வ டிஜிற்றல் பதாகையில் இருந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புகைப்படம் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பில் டிஜிற்றல் பதாகையில் கோட்டாபய ராஜபக்ஷவின் புகைப்படம் இடம்பெறவில்லை.

இதற்கு முன்னர் அந்த டிஜிற்றல் பதாகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சரும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகருமான பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் புகைப்படங்கள் இடம்பெற்றிருக்கும். இவர்களின் படங்கள் மாறி, மாறி காட்சிப்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் படம் டிஜிற்றல் பதாகையில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் கூறியுள்ளார்.

### அடுத்த மாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, சீனா, இந்தியா உள்ளிட்ட கடன் வழங்குனர்களுடன் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன எனவும் மேலும் தெரியவந்துள்ளது.

இருதரப்பு கடன் மறுசீரமைப்பு கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கு சீனா மற்றும் இந்தியா உட்பட இலங்கை கடன் பெற்றுள்ள முக்கிய நாடுகளை அழைப்பு விடுக்குமாறு ஜப்பானிடம் கோரவுள்ளார் என ரொய்ட்டர்ஸுக்கு வழங்கிய நேர்காணலில் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்..

### கண்ணீர்ப் புகைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடனடியாக திற!’ எனக் கோங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில் யூனியன் பிளேஸ் ஊடாக போராட்டக்காரர்கள் கொழும்பு கோட்டை பகுதிக்குள் நுழைய முயற்சித்தனர்.

இதன்போது போராட்டத்திச் கலைப்பதற்காக பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை பிரயோகம் மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். இந்தப் பேரணியின் போது ஏற்பட்ட குழப்பநிலையை தொடர்ந்து 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### புதிய 3 மாடிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா ஆகியோர் இணைந்து நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரண சிங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் செயலாளர் கலாநிதி பிரியந்த பிறேமகுமார, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தருமான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கணக்காளர் ஆர். ஏ.யூ.ரணவீர, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள், பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொவிட்டுக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தை மெச்சுகின்றார் இந்திய ஜனாதிபதி முர்மு அம்மையார்



நாட்டின் பாதுகாப்பு, பந்தோபஸ்து, முன்னேற்றம் மற்றும் செழிப்புக்காக இந்திய இளைஞர்கள் தங்களால் இயன்ற அனைத்தையும் கொடுப்பார்கள் என உறுதியளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி திரௌபதி முர்மு ஞாயிற்றுக் கிழமை கூறினார்.

எங்கள் அன்புக்குரிய நாடு நம் வாழ்வில் உள்ள அனைத்தையும் நமக்கு அளித்துள்ளது. புகழ்பெற்ற இந்தியாவைக் கட்டியெழுப்புவதில் மட்டுமே நமது இருப்பு அர்த்தமுள்ளதாக மாறும் என்று அவர் ஜனாதிபதியான பின்னர் நாட்டு மக்களுக்குத் தான் ஆற்றிய தனது முதல் சுதந்திர தின உரையில் கூறினார்.

சுதந்திர தினத்தை கொண்டாடும் போது, இந்தியாவும் தனது 'பாரதியத்தை' கொண்டாடுகிறது என்றும் அவர் சொன்னார்.

நமது நாடு பன்முகத்தன்மை நிறைந்தது. ஆனால், அதே நேரத்தில், நம் அனைவருக்கும் பொதுவான ஒன்று உள்ளது. இந்தப் பொதுவான இழைதான் நம் அனைவரையும் ஒன்றாக இணைக்கிறது. மற்றும் 'ஒரே பாரம்,மேலான பாரம்' என்ற உணர்வோடு ஒன்றாக நடக்கத் தூண்டுகிறது, என்று அவர் கூறினார்.

கொவிட் – 19 ஐக் கையாள்வதில் இந்தியாவின் சாதனைகள் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த தடுப்பூசி இயக்கம் ஆகியவற்றை அவர் எடுத்துரைத்தார். மேலும் தொற்றுநோய் இருந்தபோதிலும், உயர் தர தொடக்க சுற்றுச்சூழல் அமைப்புடன் இந்தியா இப்போதும் உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரங்களில் ஒன்றாக உள்ளது என்பதை அவர் சுட்டினார்.

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு பிறந்த ஒருவர் நாட்டின் தலைவராவது இதுவே முதல் முறை. அப்படித் தலைவரான அதிபர் முர்மு, இளைஞர்கள் நாட்டுக்கான கடனை அடைக்க வேண்டும் என்று கூறியமை, பிரஜைகள் தங்கள் உரிமைகளையும் தேசத்திற்குப் பங்களிக்கும் தங்கள் கடமையையும் சமன்படுத்துவதற்கான நரேந்திர மோடி அரசாங்கத்தின் சுருதியைப் பிரதிபலிப்பதாக அமைந்தது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ்.கென்னடியின் தொடக்க உரையை வரையறுத்த 'உங்கள் நாடு உங்களுக்காக என்ன செய்ய முடியும் என்று கேட்காதீர்கள், உங்கள் நாட்டிற்காக உங்களால் என்ன செய்ய முடியும் என்றுகேளுங்கள்'என்றகருப்பொருளையும் இது நினைவூட்டியது.

முதல் பழங்குடி ஜனாதிபதியான அவர் நாடாளுமன்றத்தின் மத்திய மண்டபத்தில் தாம் ஆற்றிய உரையில்தொற்றுநோய் மற்றும் தடுப்பூசி இயக்கம் பற்றிக் குறிப்பிடப்பட்டமையில் ஆச்சரியமில்லை.

தொற்றுநோய் உலகம் முழுவதிலும் உள்ள உயிர்களையும் பொருளாதாரங்களையும் வேரோடு பிடுங்கிவிட்டது. பெரும் நெருக்கடியின் பொருளாதார விளைவுகளை உலகமே எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கும்போது, இந்தியா ஒன்றுபட்டு இப்போது முன்னேறிக்கொண்டிருக்கிறது, என்று பெருமிதம் தெரிவித்தார் அவர்.

"நம் நாட்டில் ஸ்டார்ட்அப்களின் (புதிய புதிய நிறுவனங்களின்) வெற்றி – குறிப்பாக வளர்ந்து வரும் யூனிகார்ன்களின் எண்ணிக்கை – நமது தொழில்துறை முன்னேற்றத்திற்கு ஒரு பிரகாசமான எடுத்துக்காட்டு. உலகளாவிய போக்கை முறியடித்து, பொருளாதாரம் செழிக்க உதவியதற்காக அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்று ஜனாதிபதி கூறினார்.

இந்தியாவின் போக்குவரத்து அமைப்புகளை நீர், தரை மற்றும் விமான வழிகளில் ஒருங்கிணைத்ததில் இருந்து டிஜிட்டல் இந்தியா முயற்சி மற்றும் தேசிய கல்விக் கொள்கை வரை, பிரதம மந்திரியின் 'கதி – சக்தி யோஜனா'(யோசனைத் திட்டம்) அடுத்த கட்டத்திற்கு இந்தியாவின் வருங்கால சந்ததியைத் தயார் செய்வதாக ஜனாதிபதி முர்மு கூறினார். தொழில்துறை புரட்சியின் போது எங்கள் பாரம்பரியத்துடன் அதை மீண்டும் இணைக்கிறது அத்திட்டம் என்றார் அவர்.

ஜனநாயகத்தின் உண்மையான திறனை உலகுக்கு கண்டறிய இந்தியா உதவியது. தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள் மற்றும் விளிம்பில் உள்ளவர்கள் மீது கருணை காட்ட ஒரு கலங்கரை விளக்கமாக அது செயல்பட்டது. இந்திய மண்ணில் ஜனநாயகம் வேர்களை வளர விடாமல் அனுமதிப்பதன் மூலம் சந்தேகம் கொண்டவர்களை அவர்களைத் தவறானவர்கள் என நிரூபித்து சரியான ஒழுக்கத்துக்கு வளப்படுத்த வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

சுற்றுச்சூழலைப் பற்றியும் பேசிய அவர், உலகம் புதிய சவால்களை எதிர்கொள்ளும் போது, இந்தியா தனது தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்க வேண்டும் என்றார். எங்கள் பாரம்பரிய வாழ்க்கை முறையால், இந்தியர்களாகிய நாம் உலகின் பிற பகுதிகளுக்கு வழி காட்ட முடியும். யோகாவும் ஆயுர்வேதமும் உலகிற்கு இந்தியா அளித்த விலைமதிப்பற்ற பரிசுகள். அவற்றின் புகழ் உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது, என்று அவர் கூறினார்.

குறைக்கப்பட்ட பிராந்திய ஏற்றத்தாழ்வுகளுடன் நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்தற்காக இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களைப் பாராட்டிய ஜனாதிபதி முர்மு, அனைத்து நன்கு நிறுவப்பட்ட ஜனநாயக நாடுகளிலும் பெண்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற நீண்ட போராட்டங்களை நடத்துவதைக் கண்டனர் என்றார். அதனால் உலகளாவிய ரீதியில் வயது வந்தோருக்கான உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. குடியரசின் தொடக்கத்தில் இருந்து உரிமைகள், இந்தியாவின் பொருளாதார வெற்றி புதுமையான நலன்புரி முயற்சிகளுடன் சீர்திருத்தங்கள் வாழ்வதை எளிதாக்குகிறது என்றார் அவர்.

ஒருசொந்தவீடுஎன்பதுஏழைகளுக்கு இனி ஒரு கனவாக இருக்காது, அதிகமான மக்களுக்கு அது கிடைப்பதற்காக பிரதம மந்திரியின் ஆவாஸ் யோஜனாவுக்கு நன்றி கூற வேண்டும். இதேபோல், ஜல் ஜீவன் மினின் கீழ், ஹர் கர் ஜல் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய் நீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைவருக்கும், குறிப்பாக ஏழைகளுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதே இவை மற்றும் இதே போன்ற பிற முயற்சிகளின் நோக்கமாகும்" – என்று அவர் மேலும் கூறினார்.

"இன்றைய இந்தியாவின் முக்கிய வார்த்தை இரக்கம். தாழ்த்தப்பட்டவர்களுக்காக, ஏழைகளுக்காக மற்றும் விளிம்பு நிலையில் இருப்பவர்களுக்காக இரக்கம் கொள்வோம். குடிமக்களின் அடிப்படைக் கடமைகளாக நமது அரசமைப்பில் சில தேசிய விழுமியங்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடிமகனும் தங்களின் அடிப்படைக் கடமைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும், அவற்றை எழுத்திலும் உணர்விலும் பின்பற்றவும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன், இதனால் நமது நாடு புதிய உயரங்களை எட்டும்என்று ஜனாதிபதி முர்மு கூறினார்.

மாற்றத்தின் மையத்தில், நாடு சுகாதாரம், கல்வி, பொருளாதாரம் மற்றும் தொடர்புடைய பல துறைகளில் நல்லாட்சிக்கு அழுத்தம் கொடுக்கிறது என்று அவர் கூறினார். 'தேசம் முதலில்' என்ற உணர்வோடு வேலை செய்யும்போது, அது ஒவ்வொரு முடிவிலும் ஒவ்வொரு துறையிலும் பிரதிபலிக்கும். இது உலக அளவில் இந்தியாவின் நிலைப்பாட்டிலும் பிரதிபலிக்கிறது. – என்றார்.

(மூலம்: 'டைம்ஸ் ஒவ் இந்தியா')

# மிக முக்கியமான கட்டத்தில் இலங்கைக்கு இந்தியாவிடமிருந்து கண்காணிப்பு விமானம்

ஒகஸ்ட் 16 முதல் 22 வரை இலங்கை தீவு தேசத்தின் தெற்குத் துறைமுகமான ஹம்பாந்தோட்டையில் சீன ஆராய்ச்சிக் கப்பல் 'யுவான் வாங் 5' நிறுத்தப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக, கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு டோர்னியர் – 228 கடல் ரோந்து விமானத்தை பரிசாக – அன்பளிப்பாக – இந்தியா வழங்கியுள்ளது.



இந்திய கடற்படை துணைத் தலைவர் வைஸ் அட்மிரல் சதீஷ் என் கோர்மேட் இதற்காக் இரண்டு நாள் பயணமாக கொழும்பு வந்தார். இலங்கையின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட டோர்னியர் ஒப்படைப்பு விழாவில் பங்கேற்பதற்றார்.

இரு நாடுகளுக்கு இடையேயான இருதரப்புப் பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து அவர் இலங்கையில் விவாதித்துள்ளார்.

பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு, இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படை ஆகியவற்றால் கடல்சார் கண்காணிப்புக்காக அதிகம் பயன்படுத்தப்படும் இந்த இரட்டை எஞ்சின் டோர்னியர் – 228 விமானம், இனிமேல் இலங்கை விமானப்படையால் இயக்கப்படும்.

இலங்கை விமானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஏற்கனவே இந்த விமானத்தை இயக்குவதற்கான பயிற்சியை இந்தியாவில் பெற்றுள்ளனர் என்று வட்டாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தன.

இலங்கை தனது கடல்சார் கண்காணிப்பு திறன்களை மேம்படுத்துவதற்காக இரண்டு டோர்னியர் – 228 விமானங்களை 2018 இல் இந்தியாவிடம் கோரியிருந்தது. திங்களன்று ஒப்படைக்கப்பட்ட டோர்னியர் இந்திய கடற்படையின் தற்போதைய கடற்படை அணியைச் சேர்ந்தது.

சீனாவின் பாலிஸ்டிக் ஏவுகணை மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு ஆய்வுக் கப்பல் பற்றிய இந்தியாவின் கவலைகள், அம்பாந்தோட்டையில் அந்தக் கப்பல் வந்து தரிப்பதை ஆரம்பத்தில் ஒத்திவைக்குமாறு கோரச் செய்யும் நிலைமைக்கு இலங்கையை இட்டுச் சென்ற சமயத்தில் இந்தக் கண்காணிப்பு விமானக் கையளிப்பு இடம்பெற்றுள்ளது. ஆனால் அதன் பின்னர் !உளவு'க்கப்பலை அனுமதிக்கும் ஒரு 'யு – டோர்ன்' முடிவுக்கு இலங்கை சென்றது.

(மூலம்: 'டைம்ஸ் ஒவ் இந்தியா')

# இலங்கையில் மின்சார வாகன போக்குவரத்தை அதிகரிக்க டேவிட் பீரிஸ் நிறுவனத்துடன் கூட்டிணையும் அமெரிக்கா!




அமெரிக்க அரசாங்கம், அதன் அபிவிருத்தி முகவரமைப்பான, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் ஊடாக, சமூக மற்றும் பொருளாதாரத்தின் நிலைபேறான வளர்ச்சியை இலங்கையில் ஊக்குவிப்பதற்காக தூய்மையான ஆற்றல் பயன்பாட்டை விரைவுபடுத்த உறுதிபூண்டுள்ளது.

யு.எஸ்.எயிட் இலங்கை ஆற்றல் திட்டம் மற்றும் டேவிற் பீரிஸ் மோட்டோர் கம்பனி ஆகியவற்றுக்கு இடையே, 'டக் டக்ஸ்' என பொதுவாக அழைக்கப்படும் ஓட்டோக்களின் மின்மயமாக்கலுக்கு வசதிசெய்யும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் ஓகஸ்ட் 16 ஆம் திகதி இலங்கையின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த பங்காண்மையின் கீழ், இலங்கையின் மிகப் பெரிய வாகன நிறுவனமான டி.பி.எம்.சி. ஆனது, உள்ளகத்தகன இயந்திரங்களுடைய ஓட்டோக்களை மின்சார ஓட்டோக்களாக மாற்றுவதுடன் அவற்றிற்குத் தேவையான விற்பனைக்குப் பிந்தைய சேவைகளைத் தமது நாடளாவிய சேவை மையங்கள் ஊடாக வழங்கும். யு.எஸ்.எயிட் இனால் உதவிசெய்யப்படும் இலங்கை ஆற்றல் நிகழ்ச்சித்திட்டமானது டி.பி.எம்.சி. இற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதுடன் மின்சார ஓட்டோப் பாவனைக்கு உகந்த ஒரு சூழலைக் கட்டமைப்பதற்கு உதவி செய்யும் மின்னேற்றல் நிலையங்களின் ஒரு வலையமைப்பை நிறுவுவதற்கும் உதவிசெய்யும்.

"யு.எஸ்.எயிட் மற்றும் டி.பி.எம்.சி. இடையேயான ஓட்டோக்களை மின்மயமாக்குவதற்கான இப் பங்காண்மை, புதுமையான மற்றும் உற்சாகமளிக்கக்கூடிய ஒன்றாகும், மற்றும் இது இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கும். அத்துடன், இந்த நிகழ்ச்சித்திட்டம் போன்ற நிலைபேறான எரிசக்தி திட்டங்கள் அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரு பசுமையான எதிர்காலத்தை உருவாக்க உதவும்' என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலீ சங் கூறினார்.

இலங்கையில் பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தில் மிகப்பெரிய பங்கை போக்குவரத்துத் துறை கொண்டுள்ளது. மின்சார ஓட்டோக்களுக்கு மாறுவதானது எதிர்மறையான சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தணிக்கவும், புதைபடிவ எரிபொருள்களில் தங்கியிருப்பதைக் குறைக்கவும், மற்றும் எரிபொருளுக்கான அந்நியச் செலாவணி வெளியேற்றத்தைக் குறைக்கவும் உதவும்.

நாடளாவிய ரீதியில் பொது மற்றும் தனிப்பட்ட போக்குவரத்துக்குத் துணைபுரிவதற்காக வசதியான மற்றும் அணுகக்கூடிய போக்குவரத்துடன் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு நிலைபேறான வேலைவாய்ப்பை உருவாக்கி, ஓட்டோக் கைத்தொழிற்துறையை இலங்கையில் அறிமுகப்படுத்திய மற்றும் அதைக் கட்டியெழுப்பிய முன்னோடிகளாக மின்சார ஓட்டோக்களின் அறிமுகம் வெற்றிகரமாக அமைவதை உறுதிசெய்வதற்கு டி.பி.எம்.சி. ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் உள்ளது. நாங்கள் 2016 முதல் இந்தப் பயணத்தில் ஈடுபட்டுள்ளதுடன் பல முன்மாதிரி வண்டிகளை வெற்றிகரமாக மாற்றி பரிசோதனையும் செய்துள்ளோம். யு.எஸ்.எயிட் இலங்கை ஆற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன், சந்தையில் ஏற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் வர்த்தகரீதியாக நிலைக்கும்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத் துவதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதியை நிறுவ முடியும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்' என டி.பி.எம்.சியின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

USAID Sri Lanka Energy Program நிகழ்ச்சித்திட்டத்தின் தலைவரான ரிக் விட்டேக்கர் மற்றும் DPMCயின் பணிப்பாளர் பிரதான செயற்பாட்டு அலுவலர் நாலக மதுகலே ஆகியோர் தத்தமது அமைப்புகளின் சார்பாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சாட்சியமளித்தனர்.

இது USAID Sri Lanka Energy Program நிகழ்ச்சித் திட்டத்தினால் மின்சார வாகனப் போக்குவரத்தினை அதிகரிப்பதற்காக அறிவிக்கப்பட்ட இரண்டாவது பங்காண்மையாகும். 2022 ஜுன் மாதத்தில், மின்சார முச்சக்கர வண்டிகளை ஊக்குவிப்பதற்கும் உள்நாட்டில் வடிவமைக் கப்பட்ட பற்றரிகள் மற்றும் இன்வேட்டர்களைத் தயாரிப்பதற்கு உதவிசெய்வதற்கும் VEGA Innovations நிறுவனத்துடன் இதேபோன்றதொரு ஒப்பந்தத்தில் இந்நிகழ்ச்சித்திட்டம் கைச்சாத்திட்டது.

யு.எஸ்.எயிட் இலங்கை ஆற்றல் நிகழ்ச்சித்திட்டம் அமெரிக்க மற்றும் இலங்கை மக்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலைத்திருக்கும் பங்காண்மையின் கீழான ஒரு முக்கிய செயற்பாடாகும். 1961 ஆம் ஆண்டு முதல், யு.எஸ்.எயிட் ஆனது இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி, தொழில்முனைவு, பெண்களை வலுவூட்டல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பிற துறைகளுக்கு உதவியாக அமைந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 200 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் (தற்போதைய நாணய மாற்றுவிகிதங்களுக்கேற்ப சுமார் 7000 கோடி இலங்கை ரூபாக்களுக்கும்) அதிகமாக வழங்கியுள்ளது.

## கிளிநொச்சி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்துக்கு செல்லும் வீதி படையினரிடமிருந்து விடுவித்து கொடுக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் உறுதி



கிளிநொச்சி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு செல்லும் வீதி படையினரிடமிருந்து விடுவித்து கொடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தவானந்தா உறுதியளித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற பாடசாலை கல்விசார் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு சொந்தமான விளையாட்டு மைதானத்துக்கு செல்லும் வீதி, இராணுவ முகாமிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளமையால், மாணவர்கள் ஏ9 வீதி ஊடாகச் சென்று விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டிய நிலை காணப்படுவது தொடர்பிலும், அது பாதுகாப்பற்றது என்ற விடயம் தொடர்பிலும் பாடசாலை முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் அமைச்சரிடம் முன்வைத்தார்.

மேற்படி விடயம் இலகுவானது எனவும், அதனை மாணவர் பாவனைக்காக விடுவிப்பதற்கான நடவடிக்கையை உடன் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் விளக்கமாக எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 2000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில், விளையாட்டு மைதானம் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்துக்கு பின்பகுதியில் அமைந்துள்ளது. அதற்கான வீதியை உள்ளடக்கி நகரில் உள்ள இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளமையால், மாணவர்கள் நீண்ட தூரம் சுற்றி மைதானத்துக்குச் செல்ல வேண்டி உள்ளது.

இந்த நிலையில், அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பல்வேறு தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் தீர்வு கிடைக்கவில்லை. இந்த நிலஷ்யில் பாடசாலை முதல்வரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைச்சர் சாதகமான பதில் வழங்கியுள்ளமை பாடசாலை சமூகத்தினர் மற்றும் பெற்றோருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனடாவில் வேலை தருவதாக கூறி பல லட்சம் ரூபா மோசடி

கனடாவில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி 11 லட்சம் ரூபாவை பெற்றுக்கொண்ட நம்பிக்கை மீறல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை இன்று (வெள்ளிக்கிழமை) மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மினுவாங்கொடை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நான்கு நிதி மோசடி வழக்குகள் தொடர்பில் காலி நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் சந்தேகநபர் சிறையில் இருப்பதாக மினுவாங்கொடை பொலிஸார் விடுத்த கோரிக்கையை கருத்திற் கொண்டு சந்தேக நபரை மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு 12, மெசஞ்சர் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட, தற்போது சிறையில் உள்ள சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். மினுவாங்கொடை பொலிஸ் பிரிவில் வசிக்கும் முறைப்பாட்டாளர், எலும்பு முறிவு சிகிச்சை நிலையத்தில் சந்தேக நபரை சந்தித்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தனக்கும் தனது மனைவிக்கும் கனடாவில் உள்ள தனியார் வைத்தியசாலையில் வேலை பெற்றுத் தருவதாகவும் முறைப்பாட்டாளரின் இரண்டு பிள்ளைகளுக்கும் கனடாவில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பதற்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவதாகவும் சந்தேக நபர் முறைப்பாட்டாளரிடம் கூறியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபருக்கு கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களின் நகல்களுடன் முறைப்பாட்டாளர் முதலில் ஒரு லட்சம் ரூபாவை வழங்கினார் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் சந்தேகநபரின் வங்கிக் கணக்கில் 11 லட்சம் ரூபா வரையில் அவ்வப்போது வரவு வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் கையடக்க தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது. சந்தேக நபர் வெளிநாட்டு வேலை வழங்குவதாக கூறி பேஸ்புக்கில் விளம்பரம் செய்து பண மோசடியில் ஈடுபடும் நபர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸார் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்ததையடுத்து, சந்தேகநபர் காலிப் பிரிவு விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் நீதிமன்றில் மேலும் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகம் பாராட்டு!



மிக நீண்ட காலமாக செயல் இழந்து காணப்பட்ட ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் இயங்க வைத்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தென்கிழக்கு பல்கலைக்கழகம் பாராட்டி வாழ்த்தி உள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் இதற்கான பாராட்டு மற்றும் வாழ்த்துச் செய்தியை சம்பிரதாயபூர்வமாக அமைச்சருக்கு அனுப்பி உள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டு உள்ளவை வருமாறு –

எமது நாடு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ள இந்தக்கால கட்டத்தில் தாங்கள் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டு இருக்கின்றமையை நான் வரவேற்று வாழ்த்துகின்றேன்.

நாட்டு நலனை முன்னிறுத்தி தாங்கள் மேற்கொள்ள உள்ள மகத்துவம் வய்ந்த அனைத்து வேலைத் திட்டங்களுக்கும் முன்கூட்டியே எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அதே நேரம் கடந்த 05 வருடங்களுக்கும் மேலாக செயல் இழந்து காணப்பட்ட ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் செயற்பட வைத்துத் தருவதற்கு தாங்கள் மேற்கொண்டு இருக்கின்ற அனைத்து முயற்சிகளுக்காகவும் எமது கல்விச் சமூகத்தின் சார்பாகத் தங்களைப் பெரிதும் வாழ்த்துகின்றோம்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை உருவாக்கித் தந்த முன்னோடி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பின் நாமத்தை இத்துறைமுகத்துக்கு தாங்கள் முன்னின்று சூட்டி வைத்தமைக்காகவும் எமது வாழ்த்துக்கள்.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள உயர் கல்வி ஸ்தாபனம் என்கின்ற வகையில் தங்களுடைய அபிவிருத்தி சிந்தனைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் வெற்றிக்கு எம்மால் முடிந்த அனைத்து விதமான ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்குக் காத்திருக்கின்றோம்.

ஆகவே ஒலுவில் துறைமுகத்தை இன்னமும் அபிவிருத்தி செய்வதற்கு தங்களால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள நன்மை பயக்கின்ற அனைத்து முன்னெடுப்புகளுக்கும் எனது பூரண ஆதரவை வழங்குவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளேன்.

தாங்கள் கோருகின்ற பட்சத்தில் கடற்றொழில் துறை தொடர்பான எமது நிபுணத்துவங்களை தங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் ஆயத்தமாகவே உள்ளேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில் பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்

வவுனியா, ஒக. 19

வவுனியாவில் கொவிட் தொற்றுக்கு எதிராக பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் மழையுடனான காலநிலை அதிகரித்துள்ளதுடன்,இம்மாதம் வவுனியாவில் கொவிட் மரணம் ஒன்று பதிவாகியிருந்ததுடன், பலர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாக கொவிட் தொற்று தீவிர நிலையை அடையாது தடுக்கும் வகையில் பைஸர் கொவிட் தடுப்பூசிகள் மீள ஏற்றப்படவுள்ளன.

இதுவரை தடுப்பூசிகளை முறையாக செலுத்தாதவர்கள் (1,2,3,4) தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளனர்.

அந்தவகையில், வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை தடுப்பூசிகளைப் பெற முடியும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளதுடன், சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும் கோரியுள்ளனர்.

## ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு உள்வாங்கப்படும் தோட்டப்புற மாணவர் எண்ணிக்கை உயரவேண்டும்!

### செந்தில் தொண்டமான் வலியுறுத்து



ஸ்ரீபாதகல்வியியற்கல்லூரியில் தோட்டப்புற மாணவர்கள் உள்வாங்கப்படும் சதவீதம் குறைந்துள்ளமை தொடர்பில் கல்வி அமைச்சிடம் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் தெளிவுபடுத்தியுள்ளதுடன், தோட்டப்புற மாணவர்களை அதிகமாக உள்வாங்கும் பொறி முறையொன்றின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தியுள்ளார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் முயற்சியால் 1992ஆம்ஆண்டுஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகளை மாத்திரமே சேர்க்க முடியுமென்ற நிலைமை காணப்பட்டது.

ஆனால் தற்போது தோட்டங்களில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து விட்டது.

மேலும் தோட்டத்தில் அவுட்குரோவர் முறைமை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தால் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் அறவிடப்படுவதில்லை.

இதனால் தோட்டப்புறங்களில் உள்ள பிள்ளைகள் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு உள்வாங்கப்படும் எண்ணிக்கை குறைவடைந்து விட்டது. இந்தக் கல்லூரிக்கு மாணவர்களை உள்வாங்கும் பொறிமுறையை காலத்துக்கு ஏற்றால் போல் மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இந்தக் கல்லூரிக்கான அனுமதியை பெற தாய் அல்லது தந்தையின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் மாத்திரம் உள்வாங்கப்பட்டுள்ளன.

அதை மாற்றி அமைத்து தமது மூதாதையினர் தோட்டங்களில் பணிப்புரிந்திருந்தால் அவர்களுடைய குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு கட்டாயம் அனுமதியை வழங்க வேண்டும்.

அதேபோன்று தோட்டப் பாடசாலைகளில் மாணவர் ஒருவர் கல்வி கற்றிருப்பதற்கான அத்தாட்சியை உறுதிப்படுத்தினால் ஸ்ரீ பாத கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்பதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை கல்வி அமைச்சிடம் முன்வைத்துள்ளார்.

## இலங்கையில் இருக்கும் சொந்த தாயை சந்திக்கத் துடிக்கிறார் லண்டன் பெண்!



இலங்கையில் பிறந்து மூன்று மாதங்களில் பிரித்தானிய தம்பதிக்கு தத்துக்கொடுக்கப்பட்ட நிலையில், நீண்ட பல ஆண்டு போராட்டத்துக்குப் பின்னர் தமது சொந்த தாயாரை இணைய மூலம் சந்தித்துள்ளார் லண்டன் பெண்.

லண்டனைச் சேர்ந்த யாசிகா பெர்னாண்டோ என்பவரே தமது சொந்த தாயாரை நீண்ட போராட்டத்துக்குப்பின்னர் இணைய மூலம் சந்தித்துள்ளார். ஆனால், தாம் இன்னமும் உயிருடன் இருப்பதை, தமது எஞ்சிய உறவினர்களிடம் இருந்து தமது சொந்த தாயார் ஏன் இன்னமும் ரகசியம் காத்தார் என்ற தகவலையும் யாசிகா தெரிந்து கொண்டுள்ளார்.

தமது 18 வயதில் தான் யாசிகா பெர்னாண்டோ தாம் தத்துக்கொடுக்கப்பட்டுள்ளதை அறிந்து கொண்டுள்ளார். கொழும்பில் உள்ள கன்னியர்கள் மடத்தில் இருந்தே டொனால்டு மற்றும் யசந்தா தம்பதி யாசிகாவை தத்தெடுத்துள்ளனர்.

1980களில் இவர்கள் இலங்கையில் இருந்து பிரித்தானியாவுக்கு குடிபெயர்ந்துள்ளனர். டொனால்டு – யசந்தா தம்பதியிடம் மிக நெருக்கமாக இருந்தாலும், யாசிகாவுக்கு பிள்ளைகள் பிறந்த நிலையில், தமது சொந்த தாயாருடன் இணைய வேண்டும் என்ற ஏக்கம் அவருக்கு அதிகரித்துள்ளது.

இதனையடுத்து, தனியார் அமைப்பு ஒன்றின் உதவியுடன் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாசிகா தாம் பிறந்த கிராமத்திற்கு சென்றுள்ளார். ஆனால் தமது சொந்த தாயாரைக் கண்டுபிடிக்க முடியாமல் போகவே அவர் பிரித்தானியா திரும்பியுள்ளார்.

இதனிடையே, அந்தத் தனியார் அமைப்பு அடுத்த 5 நாள்களில் யாசிகாவின் குடும்பத்தினரை அடையாளம் கண்டுள்ளது. இருப்பினும் கொரோனாப் பரவல் காரணமாக குடும்பத்தினரைச் சந்திக்க முடியாமல் போயுள்ளது. இந்த நிலையிலேயே யாசிகா தமது நிலை தொடர்பில் மனம் திறந்துள்ளார்.

தமது தாயாருக்கு 31 வயதிருக்கும் போது தாம் பிறந்தார் எனவும், அவருக்கு என்ன ஆனது? ஏன் தம்மைக் கைவிட்டார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என விரும்பியதாகவும் யாசிகா குறிப்பிட்டுள்ளார். இதனிடையே, காணொலி வாயிலாக யாசிகாவை சந்திக்க அவரது தாயார் ஒப்புக்கொள்ள, அந்த சந்திப்பும் நடந்தது. ஆனால் அதன் பின்னரும் ஓராண்டு காலம் நேரி டையாக சந்திக்க முடியாமல் போனது என்கிறார் யாசிகா.

இந்த நிலையில், யாசிகாவின் சொந்த தாயாருக்கு ஒரு மகன் இருக்கிறார் எனவும், ஒரு சகோதரியை தாயார் தத்துக்கொடுத்த விடயம் அவருக்கு தெரியாது எனவும், ஒரு ரகசியமாகவே தமது தாயார் இந்த விவகாரத்தைப் பாதுகாத்து வந்தார் எனவும் யாசிகா தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போதைய சூழல் அனைத்தும் சாதகமாக அமைந்தால் இலங்கைக்கு செல்ல இருப்பதாகவும், தமது தாயாரை சந்திக்க வேண்டும் எனவும், தமது பிள்ளைகளை அவருக்கு அறிமுகம் செய்ய வேண்டும் எனவும் யாசிகா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## உணவு மற்றும் பானங்களுக்கான மக்களின் தேவைப்பாடு குறைகிறது!

### மத்திய வங்கி அறிவிப்பு

கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், ஜூலை மாதத்தில் உணவு மற்றும் குளிர்பானத் துறையில் தேவை குறைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், நுகர்வோரின் வாங்கும் திறன் குறைந்துள்ளதாகவும், எரிபொருள் பற்றாக்குறையே இதற்குக் காரணம் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மேலும், கடைகளுக்கு நுகர்வோர் வருகையும் குறைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, கடந்த ஜூலை மாதம், ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், உற்பத்தித் துறையில் வாங்குபவர்களின் குறியீடு, 2.7 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

உற்பத்தி நடவடிக்கைகளிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் மொத்த கொள்வனவுகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடும் போது குறைவடைந்துள்ளன எனக் கூறப்படுகின்றது.

# கேட்டது உணவுக் கப்பல் வந்ததோ உளவுக் கப்பல்!



**என்.சத்தியமூர்த்தி**



## அக்கரை / அக்கறை அலசல்

இதோ, அதோ என்று தென்னிலங்கை எதிர்பார்த்திருந்த சீனக் கப்பல் கடைசியில் வந்தே விட்டது. அவர்கள் எதிர்பார்த்ததை விட ஒரு கிழமைக்குப் பின்னர் இந்த கப்பல் வந்துள்ளது. என்ன, அவர்கள் எதிர்பார்த்தது, உணவுக் கப்பல். வந்து சேர்ந்ததோ உளவுக் கப்பல். எங்கோ ஓர் எழுத்து பிழை. அது எங்கே என்று கொழும்பை வதிவிடமாகக் கொண்ட சர்வதேச இராஜதந்திரிகள் முடியைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை தலைவிரித்தாடத் துவங்கிய காலகட்டத்தில், அன்றைய ராஜபக்ஷ அரசிற்குக் கையைப் பிசைந்து கொண்டு வாளாவிருப்பதை விட உருப்படியாக ஒன்றையும் செய்யத் தெரியவில்லை. அவர்களுடைய இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தாலும் நிலைமை கிட்டத்தட்ட இது போன்றேதான் இருந்திருக்கும்.

என்ன, அன்று அவர்கள் மட்டுமே ஆட்சியில் இருந்தமையால் இவர்கள் தப்பினார்கள். அன்று அவர்களை மாற்றி விட்டு தாங்கள் ஆட்சி செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள், இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் பங்களிக்க அழைப்பு வரும் போது, அதனைத் தட்டி கழிக்கப் பார்க்கிறார்கள். காரணம், சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வருவதற்கு.

ஆனால், அன்றைய காலகட்டத்திலும், ராஜபக்ஷக்களின் சீன உறவைக் குறித்து ஆதரவாக பேசியவர்களும் சரி, அதனைக் குறை கூறியவர்களும் சரி, கடைசி வரை எதிர்பார்த்தது, நாட்டின் உணவு மற்றும் எரிபொருள் தேவைக்கான மசகு எண்ணெயைத் தாங்கிக் கொண்டு, ஒன்றன் பின் ஒன்றாக சீனக் கப்பல்கள், கொழும்பு துறைமுகத்தை உடன் தானே வந்தடையும் என்று. ஆனால், கடைசிவரை அதுநிகழவில்லை.



ஏன், இன்றளவும் நடைபெறவில்லை.

மாறாக, இப்பொழுது வந்திருப்பது எல்லாம், இலங்கையின் அண்டை நாடான இந்தியாவை வேவு பார்க்கும் சீனாவின் உளவு கப்பல்தான்.

இந்தியாவை அண்டை நாடு என்று கூறுவதை விட, உறவு நாடு என்றே கூற வேண்டும். நாட்டில் உள்ள நான்கு இனத்தவர்களான சிங்களவர், இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய நான்கு இனத்தவருக்குமே மத ரீதியாகவோ, மொழி ரீதியாகவோ, உறவு முறை ரீதியாகவோ இந்தியாவோடு நூற்றாண்டுகளாகத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது.

### இந்தியாவின் கவலை

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில், கேட்காமலே உணவு, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய மருந்து வகைகளை அள்ளி அள்ளி அளித்த நாடு, இந்தியாதான். பிரச்சினையின் தாக்கம் அதிகமாக இருந்த கடந்த மாதங்களில், யாரோ கூறியது போல், கொழும்பில் இருந்து புதுடெல்லிக்கு டெலிபோன் கோல் எடுக்க வேண்டியதுதான் தாமதம், உடன் தானே, இந்தியாவில் இருந்து அடுத்த உணவுக் கப்பல் புறப்பட்டு விடும். இப்படித்தானே, கடந்த சில மாதங்களில், இலங்கை தனது பசி - பிணியை சிறிய அளவிலாவது எதிர்கொள்ள முடிந்தது?

இதனை, நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும், ஜனாதிபதி ரணில் திரும்பி – திரும்பி ஆணித்தரமாக அடித்து உரைத்துள்ளார். அது, மேலை நாடுகளுக்கு மட்டுமல்ல, இலங்கையின் நட்பு நாடு என்று பீற்றி கொள்ளும் சீனாவிற்கும் ரணில் அடித்த ஆப்பு என்றே கருதப்பட்டது. ஆனால், நடந்தது என்ன?

இந்தியாவை வேவு பார்க்கவே 'யுவான் வாங் - 5' என்ற சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகிறது என்று இலங்கை அரச தரப்பிற்கு உறுதியான செய்தி இல்லை என்றாலும், அதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றே அவர்கள் கருதிச் செயல்பட வேண்டும். இது போன்ற விடயங்களில் இந்தியாவின் கவலைகள் குறித்து இலங்கைத் தரப்பிற்கு நன்றாகவே தெரியும்.

முன்பு ஒரு முறையும், ராஜபக்ஷக்கள் ஆட்சியில் இருந்த காலத்தில், 2014 ஆம் ஆண்டு தொடர்ந்து சீனாவின் இரண்டு நீர் மூழ்கி கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் அடுத்தடுத்து வந்து சில நாள்கள் தங்கின. இப்போது போலவே அப்போதும், சீனக் கப்பல், உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிரப்பி கொள்ளவே வந்துள்ளன என்று இலங்கை அரச தரப்பிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதுவே, இந்தியாவிற்கான இலங்கையின் பதிலாகவும் இருந்தது.

ஆனால், 2014 இல் வந்த நீர்மூழ்கி கப்பல்கள், இந்தியா - இலங்கைப் பகுதியில் இந்தியப் பெருங்கடலில் தண்ணீரின் அழுத்தம் மற்றும் எதிர்ப்புச் சக்தி போன்ற பல்வேறு அளவுகள் குறித்து அறிந்து கொள்ளவே வந்ததாகக் கடல் துறை மற்றும் கப்பல் படை வல்லுனர்கள் கருதினர். எதிர்காலத்தில், சீன நீர்மூழ்கிக் கப்பல்கள், இந்தக் கடல் பகுதியில் இந்தியாவுடன் கடல் போர் நிமித்தமாகப் பயணப்பட வேண்டி இருந்தால், இது போன்ற அளவுகோல்கள் கை கொடுக்கும் என்றும் வல்லுனர்கள் தெரிவித்தனர்.

அதற்கு அடுத்த கட்டமாகவே, இந்தியாவின் தென் கடலோர பகுதிகளில் நிறுவப்பட்டிருக்கும் அணு சக்தி உலைகள், கப்பல் மற்றும் விமானப் படை பிராந்திய தலைமையகங்கள் மற்றும் தளங்கள் மற்றும் ரொக்கெட் ஏவுதளம் போன்ற அதி முக்கியத்தவம் வாய்ந்த இடங்கள் குறித்து ஆய்வு செய்து அறிந்து கொள்ளவே, யுவான் வாங் - 5 என்ற கப்பல் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று கருதப்படுகிறது. இதனால்தான், இந்தியா இது குறித்துத் தனது கவலைகளை இலங்கை அரசிற்குத் தெரியப்படுத்த வேண்டிய நிர்பந்தம் எற்பட்டது எனலாம்.

### அமெரிக்காவிற்கும் கவலை

இந்தியாவைப் போலவே, அமெரிக்காவிற்கும் கவலை. எங்கே, ஹம்பாந்தோட்டையில் சுமார் ஒரு வார காலத்திற்கு உணவு பொருள்களை ஏற்றிக் கொள்ளவதற்கு என்று நங்கூரம் இடும் சீனாவின் உளவு கப்பல், அங்கிருந்து தெற்கே டீகோ காசிய தீவில் உள்ள அமெரிக்க இராணுவ தளத்தையும் வேவு பார்க்குமோ என்று அமெரிக்கா கருதுவதில் நியாயம் இருக்கிறது.


இந்தியா - அமெரிக்கா என்ற இரு நாடுகளின் வேண்டுகோளையும் செவிமடுத்த இலங்கை அரசு, சீனக் கப்பலுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. முக்கியமாக, இலங்கைக் கடல் பகுதியில் இருக்கும் போது அந்தக் கப்பல், ஆராய்ச்சி என்று உளவு வேலை செய்ய கூடாது. அதாவது, எந்தவித ஆராய்ச்சியும் மேற்கொள்ள கூடாது. எரி பொருள் மற்றும் உணவுப் பொருள்களை நிரப்பிக் கொள்ள வந்தாயா, அந்த வேலையை மட்டும் செய்து விட்டுப் போய் கொண்டே இரு என்று உத்தரவு.

என்றாலும், இந்த இரண்டு வேலைகளுக்கும் 16 ஆம் திகதி துவங்கி, 22 ஆம் திகதி வரை, ஏழு நாள்கள் தேவையா என்ற கேள்வியும் எழுகிறது. அந்த வகையில், சீனக் கப்பலை இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் தங்களது தொழில்நுட்பத்தால் கண்காணித்துக் கொண்டு இருக்கும் என்றும் கருத இடமிருக்கிறது. இலங்கை அரசிற்கு அத்தகைய வசதிகள் இல்லை என்றும் எண்ண வேண்டி இருக்கிறது.

### நாணயத்தின் இரு பக்கங்கள்

இந்தப் பின்னணியில், இந்தியாவின் சுதந்திர தினமான 15ஒகஸ்ட் அன்று, இலங்கை அரசு தனது கடற்பரப்பின் மேல், வானத்தில் இருந்து ஒரு கண் வைத்துக் கொள்ள உதவ இந்தியா முன் வந்திருக்கிறது. முன்னர் அளித்த வாக்குறுதிக்கு இணங்க, இந்தியா அன்று, டோர்னியர் என்ற விமானத்தை இலங்கை விமானப் படைக்கு அன்பளிப்பாக அளித்துள்ளது. இது போன்ற இரண்டாவது விமானம், இன்னும் இரண்டு ஆண்டுகளில் கையளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# குமார கோபுரக் கும்பாபிஷேகமும் கார்த்திகைத் திருநாளும் இன்று



- மயூரகிரி சிவாச்சார்யார் -

நல்லூரில் இன்று ஆவணிக் கார்த்திகைத் திரு நாளில் ஸ்ரீ குமார கோபுர கும்பாபிகேம் நிகழவுள்ளது.

குமாரசுவாமி என்பது முருகனுக்கான முக்கிய திருநாமங்களில் ஒன்று. குமார நாமத்தை சடாக்ஷர மாகச் சொல்வோரும் உளர்.

அவனது சரிதம் பேசுவது குமாரசம்பவம். அவன் பெருமை பேசும் வேதப் பகுதி குமார ஸூக்தம். ஆகம நூல் குமாரதந்த்ரம்.

ஆகவே, குமரன் என்றால் அது முருகன். அந்த வகையில் குமார கோபுரம் என்று நல்லூரின் உள்ளக புதிய ராஜகோபுரம் பெயரிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு அமரத்துவம் எய்திய ஆலய முன்னாள் பரிபாலகர்குமாரதாஸமாப்பாண முதலியாரின் சிந்தனையும் இங்கே வெளிப்படல் கவனித் தற்குரியது.

முருகனுக்கு உகந்த நட்சதிரங்களில் கார்த்திகையே முதன்மையானது. அதனால் அவன் கார்த்தி கேயன் எனப்படுகிறான்.

எனவே, கிருத்திகா பூஜனப் பிரியனான அவனை மாதா மாதம் வரும் அனைத்துக் கார்த்திகை நாளிலும் சிறப்பாக வழிபடுவர்.

அவற்றிலும் மாவைக்கந்தனின் உற்சவ காலக் கார்த்திகைத் திருவிழாவும் நல்லைக் கந்தனின் உற்சவகாலக் கார்த்திகைத் திருவிழாவும் இவ்விரு தலத்தும் தனிச்சிறப்புடையன.

அதிலும், நல்லூரில் ஏதாவது புதிய ராஜகோபுரம், சபை - கேணி என எது அமைக்கப்பட்டாலும் உத்ஸவ கால கார்த்திகை அன்றே கும்பாபிகேம் செய்கின்ற வழக்கமும் அண்மைக்காலத்தில் பரிபாலகர்களால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டும் குபேர வாசலின் உள்ளே குமார கோபுரம் கும்பாபிகேம் காண்கிறது.

மேலும், இன்று மாலை உத்ஸவத்தில் கோலாகலா தீசராக செல்வ முத்துக்குமார சுவாமி வள்ளி தேவ சேனாவுடன் பூஞ்சப்பரத்தில் தீப பிரகாசராகப் பவனி வருவார்.

குமாரசுவாமி இருக்க நமக்குக் குறையும் உண்டோ?

**வேல்வாழி மயில்வாழி சேவல் வாழி**
**வேறுமுள படைவாழி விளங்கு தண்டைக்**
**கால்வாழி யருள்பொழியும் விழிகள் வாழி**
**கவின்குலவு மீராறு கரங்கள் வாழி**
**மால்வாழி வாழியெனப் பணிந்து வாழ்த்து**
**மலைமாது தருமுருகன் மகிழ்ந்தவாறு**
**பால்வாழி யெனையாளுங் கருணை வாழி**
**பங்கிருந்த மங்கையர்தம் பதங்கள் வாழி**

# யாரென்று தெரிகிறதா?



நல்லூர் மஹோத்ஸவத்தில் ஒரு நாள் காலை கஜவல்லி மஹா வல்லி உத்ஸவம் நிகழ்கிறது.

இந்த அம்பாள் யாரென்று பலரும் கேட்கிறார்கள்? மஹாலக்ஷ்மி போலிருக்கிறாளே என அபிப்பிராயமும் சொல்கிறார்கள்.

இப்பொழுதெல்லாம் துல்லியமான படங்கள் இணைய மூடே பரவுவதால், தமிழக நண்பர்களும் கேட்கிறார்கள்.

ஆமாம். இந்த அம்பாள் யாழ். நல்லூரில் மட்டுமே உள்ள விசேமான திருவடிவம். மஹாலக்ஷ்மி போல இருந்தாலும் இவள் முருகனின் கௌமார லக்ஷ்மி.

அபய, வரதங்களுடனான முன் கரங்கள், தேவசேனா ஏந்தும் நீலோத்பலம். வள்ளி நாயகி ஏந்தும் தாமரை இவைகளை ஏந்திய கரங்கள் என்று நான்கு கரங்களுடன் இந்த அம்பாளின் காட்சி.

ஏதாவது சில்ப நூல்களில் இப்படி ஒரு அம்பாள் வடிவம் சொல்லப்பட்டிருக்கிறதா? என்று தேடினால் திருத்தணிகையில் இப்படி ஒரு தேவி இருப்பதாக கேள்வி.

உள் நின்று உணர்த்தும் முருகனின் ஆணைக்கேற்ப, தேவியர் இருவரும் ஒருவரே என்பதை உணர்த்துவதாக, இருவரும் ஒன்றாகும் இந்த வடிவத்தை நல்லூரில் அமைத்திருக்கிறார்கள்.

கோயில் உட்பிரகாரத்தில் தனிச்சந்நதி கொண்டிருக்கும் இந்த அம்பாளின் சந்நதி அருகே தேவியர் இருவரும் ஒன்றாகி (அர்த்த நாரீஸ்வரர்/சங்கர நாராயணர்) போல, திகழும் காட்சியை ஓவியமாகவும் தேவஸ்தானத்தினர் வரைந்துள்ளனர். மஹா கஜ வல்லி என்றும் சொல்லத் தக்க இந்த தேவி குமரனின் சக்தியாக கௌமாரியாகவும் கொள்ளத்தக்கவள்.

- தியாக. மயூரகிரிக்குருக்கள் -

# பதிகமும் பொழிப்பும்



பாடல் - 09

**வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனும்**
**சூழவெங்கும் நேடஆங்கோர் சோதியுளா கிநின்றாய்**
**கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் னடியின்**
**நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.**

**பொருள் :**

மஹாபலிச் சக்கரவர்த்தியின் பேருருவம் கொண்ட மகனான 'மந்த மதி' என்பவன் ஸ்ரீரங்கம் நோக்கிப் போனபோது ஒரு மதயானையைப் போல் கைகளை வீசி நடந்துவர, மக்கள் அவனுக்குள் மாட்டிக்கொண்டு நசுங்கினர். அவன் கைவீச்சில், சுழற்று விழுந்து கோபமடைந்த 'த்ரித' முனிவர் யானையாகப் கடவாய் எனச் சாபமிட, பயந்து போன 'மந்தமதி' அவரை வலம் வந்து வணங்கி மன்னிப்புக் கேட்க, சாபத்தைச் சற்று மாற்றி, திருமால் கையால் முக்தி பெறுவாய் என்றார். கம்சனின் பெருமை யெனும் படியாக, குவலய பீடமெனும் பெருத்த யானையாக வந்து சேர்ந்தான். கண்ணன் வந்தான், குத்தினான், தந்தத்தை ஒடித்தான், முக்தி கொடுத்தான். யானையின் வெண்கொம்பைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டான். இப்படி கம்பீரமாய் நடந்த கண்ணனாகிய திருமாலும், ஐந்து தலைகளோடு விளங்கியவனும், ஆணவத்தால் ஒன்றைப் பறிக்கொடுத்து நான்முகனானவனும், சூழ வலம் வந்து, அவர் தோண்டிக் கொண்டு கீழே போயும் இவர் மேலே பறந்து பறந்து தேடியும் களைத்த போது ஓங்கி உயர்ந்து நெடிய சோதிப் பிளம்பாய் நின்றவனே, அன்று திருமாலின் வராக அவதாரத்தை முடித்து வைத்து, அதன் அடையாளமாக, அந்தக் கேழலின் (பன்றி) வெண்ணிறமான கொம்பை அணிந்தவனே, பெம்மானே! கேடுகளை இல்லாது அழிக்கும், அழிவே இல்லாத பொன்னார் திருவடிகளைப் போற்றி அதன் குளிர் நிழலில் களித்து நிற்கும் மெய்யடியார்களின் இடர்களைக் களைத்து, இன்பத்தை அளிப்பாயப்பா! எம் இறைவா! பொன்னே, பொருளே, அன்பே, ஆரமுதே.. திருநெடுங்களம் வாழும் என் ஆண்டவனே!

- ஓவியமும் விளக்கமும்:- பத்மவாசன் - (இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து....)



# வேல் வடிவ வழிபடும்

முருக வழிபாட்டு மரபில் இறைவன் முருகனை வேல் வடிவமாக வழிபடும் மரபு தனித்துவமானது.

பல்லாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்த இம்மரபு எங்கும் இருப்பினும் இலங்கையில் பேராலயங்களில் கூட மூலவராக கருவறையில் முருக வடிவமாக வேல் அமைந்திருப்பது தனித்துவமானதாகும்.

இதனுடைய நீட்சியாக முருகனாக வழிபடப்படும் வேலின் இருபுறத்தும் வள்ளி, தேவசேனா தேவியரின் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து வழிபடும் மரபும் பல நூறாண்டுகளாக நிலவி வருகிறது.

இன்றைக்கும் புகழ்பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலில் மூலஸ்தானத்தில் இருபுறம் தேவியர் அமைய நடுவில் முருகவேள் முருக வேலாக எழுந்தருளியிருப்பதை காணலாம்.

நல்லூரில் கருவறையில், விளக்கொளியில் இவ்வாறு தரிசனமருளும் பெருமான் உற்சவங்களிலும் இவ்வாறு தேவியர் நடுவே, கந்தவேள் கந்தவேலாகவே மாடவீதியில், எழுந்தருளும் காட்சியை காணாதார் இலர்.

இந்த நல்லூர் கருவறைக் காட்சி (வேல் வடிவ இறைவனின் இருபுறமும் தேவியர்) மிகவும் எளிமையானது. அங்கே மின்விளக்குகள் ஒளி பாச்சுவதில்லை. பெரிய ஆடை - அலங்காரங்கள் செய்யப்படுவதில்லை.

அத்தனை அமைதியாக - ஆனந்தமாக - அற்புதமாக வெளி அலங்காரங்கள் , மீடியா வெளிச்சம் இவைகளுக்கெல்லாம் அகப்படாமல் பக்தி வலையில் படுவோனாக நல்லூரின் மூல நிலையத்தில் சித்தர்கள் சேவித்த தெய்வம் கொலுவிருக்கிறது. அது எங்களை எப்போதும் எந்நேரமும் காத்தருளட்டும்!!

- மயூரகிரி சிவாச்சார்யார் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-97

**அமிர்தலிங்கத்தின் கடிதம்**

இந்திய ஒப்பந்தத்திற்காக ராஜீவ் காந்தியால் பிரபாகரனோடு எப்படி பிரத்தியேகப் பேச்சுக்கள் நடத்தப்பட்டனவோ, அதேபோல அவரும் அவரது வெளியுறவு, உள்துறை அமைச்சர்கள், பிரதிநிதிகள், அதிகாரிகள் ஜே.ஆருடனும் அவரது அமைச்சர்கள், அதிகாரிகளுடனும் பேச்சுக்கள் நடத்தினார்கள்.

சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் வழமையான பிடியை ஜே.ஆரும் பிரதிபலித்தார். இலங்கையில் ஒரு தமிழ்த் தேசம் அல்லது பிரதேசம் இருந்ததையோ, அதற்குத் தமிழ் மக்கள் உரித்தானவர்கள் என்பதையோ அவரும் ஏற்கவில்லை. அதனைத் தாம் தமிழ் மக்களின் தலைவர்களுக்குத் தாராளமாகத் தெரியப்படுத்தியுள்ளார் என்ற நிலைப்பாட்டிலேயே நின்றார்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிறைவேற்றிய பின்னர் நடந்த தேர்தலில் அது அமோக வெற்றி பெற்றாலும், தமிழ்த் தேசம், பிரதேசம் என்பதற்கு எதுவித நியதியும், தார்மீகமும் இல்லை என்பதே அவரது தொடர்ந்த வாதங்களாக இருந்தன.

1977ஆம் ஆண்டின் கலவரங்களுக்கு பின்னர் ஜே.ஆர். தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் – முக்கியமாக எதிர்க்கட்சித் தலைவரான அமிர்தலிங்கத்தையும் – அவர்கள் நாட்டுக்குத் துரோகங்கள் செய்கிறார்கள், நாட்டைக் கேவலப்படுத்துகிறார்கள் என அறிக்கைகளும், ஊடக செவ்விகளும் தருவது வழமையாக இருந்தது. இவை அரசாங்க ஊடகங்களில் மிகப் பிரபலமாக வெளியிடப்பட்டு கூட்டணியையும் அமிர்தலிங்கத்தையும் பாதித்தமையால் அவர் 11 ஜூலை 1979இல் ஜே.ஆருக்கு இவை பற்றிக் கடிதம் ஒன்றை அனுப்பினார்.

அதில் அவர், ஜனாதிபதியான ஜே.ஆருக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தேர்தலில் தமிழ் மக்களின் தேசத்தை மீட்டு நிலைநாட்டவும், அவர்களது தமிழ் தேசத்தின் சுதந்திரத்தையும் இறைமையையும் அவர்களது அழிக்க முடியாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை தெரிந்திருந்தார் எனவும், ஜே.ஆர். அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி அவரே ஏற்றுக்கொண்ட தமிழ் மக்களின் குறைகளை சர்வ கட்சி மாநாடு ஒன்றின் மூலம் தீர்ப்பதற்கு எதுவித முயற்சியும் எடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டி இருந்தார்.

தனது பதவியைப் பாவித்து சிங்கள மக்களை ஒருபோதும் தாம் தரக்குறைவாகப் பேசியவர் அல்லர் எனவும், சர்வ தேசப் பிரதிநிதிகள் தன்னைச் சந்திக்கும் போது தமிழ் மக்களின் குறைகளை ஒட்டி அரசாங்கம் பாராமுகமாக இருக்கின்றது என்ற உண்மையைக் கூறுவதன் மூலம் தனது கடமையைத்தான் தான் செய்கிறார் எனவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டி இருந்தார். தமிழீழ மக்களுக்கு அவர்களுக்குத் தேவையான எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டுள்ளன என்ற பிரச்சாரங்களில் உண்மைத் தன்மை இல்லாதமையைத்தான் இந்தியாவிலும் மற்ற சர்வதேச நாடுகளிலும் தாம் சுட்டிக் காட்டினார் என்றும் அமிர்தலிங்கம் வெளிப்படுத்தினார்.

**கே ஆரின் பதிலும் மறுதலிப்பும்**

அதற்கு 16 ஜூலை 1979இல் ஜே.ஆர்.பதில் அனுப்பினார்.


அதில, 'நீங்கள் உங்களின் முதலாம் விசுவாசம் கூட்டணிக்கும் அவர்களைத் தேர்தலில் வெற்றி பெறச் செய்த தமிழ் மக்களின் நோக்கத்துக்கும்தான்' எனவும், பின் 'அந்த நோக்கம் தமிழ் தேசத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் பெற்று எடுப்பதுதான்' என்கிறீர்கள். அந்த அலங்கார அடுக்கு மொழிகளால் ஒரு தனிநாட்டை அமைப்பதற்கும், அதற்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள், புத்தளம் மாவட்டம், மத்திய, சபிரகமுவ மாகாணங்களில் பெரும் பகுதியாகத் தமிழ் மக்கள் வசிக்கும் சில மாவட்டங்களையும் உள்ளடக்கி, உங்களது தமிழ் ஈழம் எனக் கூறுகிறீர்கள். 1977 ஆம் ஆண்டின் தேர்தலில் மக்கள் வாக்களித்த தன்மைகளை பார்த்தீர்களானால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 72 12 வீதம், மன்னாரில் 51.58 வீதம், வவுனியாவில் 55.99 வீதம், திருகோணமலையில் 27.29 வீதம், மட்டக்களப்பில் 32.53 வீதம், அம்பாறையில் 21.90 வீதம், புத்தளத்தில் 1. 74 வீதம் வாக்குகளைப் பெற்றிருக்கின்றீர்கள். மற்ற மாவட்டங்களில் நீங்கள் ஒருவரையும் நிறுத்தவில்லை.

ஆகவே இந்தப் பெறுபேறுகளைப் பார்த்தால் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக உங்களது ஈழத்திற்கு ஆதரவு தரவில்லை என்பது தெளிவு. நீங்கள் யாழ்ப்பாணத்தில் உங்களுக்கு மக்களின் ஆணை கிடைத்ததாகக் கோரலாம். ஆனால் வடமாகாணத்தின் மற்றைய இரண்டு மாவட்டங்களிலும் கிடைத்த சிறிய பெரும்பான்மைகளோடு அப்படியான ஆணையைக் கோர முடியாது. கிழக்கு மாகாணத்திலும் புத்தளத்திலும் நீங்கள் மிகத் திட்டவட்டமாகத் தோற்கடிக்கப்பட்டீர்கள். உங்களுடைய ஈழத்தை யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் மாத்திரம் வைத்துக் கொள்ளப் போகிறீர்களா? அல்லது வடக்கு, கிழக்கு மாகாணங்களையும், அத்தோடு மற்ற மாகாணங்களின் சில மாவட்டங்களையும் சேர்த்து ஒரு ஈழத்தை, அந்தக் கோட்பாட்டை, முற்று முழுதாக நிராகரிக்குமாறு எனது அரசுக்கு தந்த பெரும்பான்மை மக்களின் ஆணையுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப் போகிறீர்களா?

தமிழர் விடுதலைக் கூட்டணி வட மாகாணத்தில் ஒவ்வொரு நாடாளுமன்ற ஆசனத்தையும் வென்றது உண்மைதான். நீங்கள் என்னிடம் எனது கட்சி வவுனியாவிலும் முல்லைத்தீவிலும் தேர்தலில் பிரதிநிதிகளை நிறுத்தக்கூடாது எனப் பேச்சு வார்த்தைகள் நடத்திய போது, நான் வவுனியாவை ஒத்துக் கொள்ளாது முல்லைத் தீவில் விட்டுக் கொடுத்தேன். அப்படி செய்யாது விட்டால் முடிவுகள் வேறு விதமாக இருந்திருக்கும்.

உங்களது கட்சியின் அங்கத்தினர்களை எனது மந்திரி சபையில் பதவி ஏற்குமாறும், மாவட்ட அமைச்சுகளைப் பெறுமாறும் கேட்டிருந்தேன். நீங்கள் லண்டனில் இருந்த போது உங்களது நாடாளுமன்றக் குழுவின் அங்கத்தினர்கள் சிலர் என்னை வந்து எனது வாட் பிளேஸ் இல்லத்தில் சந்தித்து, வடக்கு, கிழக்குக்கான சில மாவட்ட அமைச்சுகளை நிரப்பாமல் வைத்திருக்குமாறும், நீங்கள் திரும்பி வந்த பின் கலந்தாலோசித்து அவற்றை ஏற்பதா, இல்லையா என முடிவுகள் தருவார்கள் எனவும் கூறினார்கள். அவற்றை சிறிது நேரத்துக்கு முன்னர்தான் நிரப்பினேன். நீங்கள் அரசாங்கத்தையோ, சிங்கள மக்களையோ குற்றம் கூறிப் பேசினீர்கள் என்று நான் கூற வரவில்லை. ஆனால் பேசிய கருத்துக்கள் நாட்டுக்கு வெளியே ஓர் எதிர்க்கட்சி தலைவராக முன்னைய காலத்து எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவரும் செய்யாத விதத்தில் அந்தப் பதவியைப் பாவித்தீர்கள் என்பதைத் தான் குறிப்பிட்டேன் – எனத் தெரிவித்தார்.

மேலும் தான் உத்தரவாதம் அளித்தபடி தமிழ் மக்களின் குறைகளை நிறைவேற்றுவேன் என்பதைச் சுட்டிய அவர்,




அது எப்படி என்பது பற்றியும் குறித்து இருந்தார்.

அவற்றுக்கு மறுதலிப்பாக 27 ஜூலை 1979 கடிதத்தில் அமிர்தலிங்கம் அப்படியான விதங்களில் தேர்தலில் தரப்பட்ட விகிதாசாரங்களைக் கணிக்கக் கூடாது என்றும், அப்படிப் பார்த்தால் வடக்கு, கிழக்கு, ஏன் மலையகப் பகுதிகளில் பல மாவட்டங்களில் தரப்பட்ட வாக்குகளில் அவர்கள் புதிய குடியரசு யாப்பை ஏற்படுத்துவதற்கு ஆணை தரவில்லை எனச் சுட்டிக்காட்டினார். முக்கியமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மிகத் தெளிவாக நாட்டில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாக புவியியல் ரீதியில் ஒன்றோடு இணைந்த அவர்களின் நிலப்பரப்பு (The Geographically contiguous areas that have been the traditional homeland of the Tamil speaking peoples in the country) என்றுதான் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு ஆணை கோரப்பட்டு பெறப்பட்டது. தாங்கள் புத்தளத்தில் ஒரு பிரதிநிதியை நிறுத்தி இருந்தாலும் தாங்கள் புத்தளத்தையோ, மத்திய, சபிரமுவா மாகாணங்களின் பகுதிகளையோ, தமிழ்த் தேசமாக இணைக்க நோக்கினோம் என்பது அபத்தமான, பொறுப்பற்ற, சிங்கள மக்களைப் பிழையான சிந்தனைகளில் நடத்துவதற்கான திரிவுகள் எனக் குறிப்பிட்டார் அமிர்தலிங்கம்.

(தொடரும்)



காலைக்கதிர் Kalaikkathir

# நெல் விற்பனை கடும் பாதிப்பு வவுனியா விவசாயிகள் கவலை

சிறந்த விலையின்மை மற்றும் நெல்லைக் கொள்வனவு செய்ய மக்கள் ஆர்வம் செலுத்தாதமையால் நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுவதாக வவுனியா விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

தற்போது சிறுபோக அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் ஓர் ஏக்கருக்கு 30 மூடை என்ற ரீதியில் விளைச்சல் கிடைக்கின்றது. எனினும் நெல் ஆலை உரிமையாளர்களோ வெளிமாட்டங்களில் இருந்தோ நெல்லை கொள்வனவு செய்வதற்கு எவரும் வராத நிலை காணப்படுகின்றது.

டீசல் பிரச்சினையே காரணமாக உள்ளது. இதனால் நிர்ணய விலை வவுனியாவில் காணப்படவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த முறை சேதன பசளையைப் பயன்படுத்தி செய்த போதிலும் விளைச்சல் குறைவாகக் காணப்பட்ட போதிலும் 10 ஆயிரம் ரூபா வீதம் ஒரு மூடை விற்பனை செய்திருந்தோம். இம்முறை 40ஆயிரம் ரூபாவுக்கு இரசாயன பசளையிட்டும் கொள்வனவாளர்கள் இன்மையால் நல்ல விலை கிடைக்கவில்லை.

நெல்லையும் விற்பனை செய்ய முடியாமல் இருக்கின்றது. 5 ஆயிரத்து 900 மற்றும் 6 ஆயிரத்து 900 என்ற ரீதியில் நெல்லை சிலர் கொள்வனவு செய்தாலும் 15 முதல் 20 நாள்கள் கழித்தே பணத்தைத் தருகின்றனர்.

அத்துடன் நெல்லை கட்டுவதற்கு பைகள் இல்லை. ஒரு பை 160 ரூபா வரையில் விற்கப்படுகின்றது. அதனால் பழைய பைகளையே பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. சணல் ஒரு கிலோ 2000 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

அதேவேளை நெல்லை விற்பனை செய்ய நெல் ஆலைகளுக்கு கொண்டு சென்றாலும் அவர்கள் நெல் வேண்டாம் என்கின்றார்கள். அதனால் திருப்பி கொண்டு



வர வேண்டிய நிலை உள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கேட்டது உணவுக் கப்பல் ....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விமானம் கையளிக்கப்படும் விழாவில் பங்குபெற்ற ஜனாதிபதி ரணில், இந்தியாவுடனான உறவு குறித்து சிலாகித்து பேசி உள்ளார். இந்தியாவும் இலங்கையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்று அவர் கூறியது, இந்தியாவைச் சமாதானபடுத்துவதற்காக என்று தோன்றினாலும், அதுவே உண்மையும் கூட.

இந்த உறவின் அடிப்படையிலான தொடர்புகளை மீண்டும் உறுதி செய்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம். அதில் சீனா அவ்வப்போது காலனாய் அவதரித்து வருகிறது. அவ்வாறு மட்டுமே அவதானிக்கவும் முடிகிறது.

### பிறிதொரு காரணம்

சீனாவின் ஆராய்சிக் கப்பல், ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நங்கூரம் இடாமல், நடுகடலில் இருந்தபடியே, இந்தியக் கடலோரப் பகுதிகளை செயற்கை கோள்கள் வழியாக வேவு பார்த்து, தேவையான விடயங்களை அறிந்து கொள்ள முடியும் என்று கூறுவோர் உள்ளனர். அவ்வாறானால், ஹம்பாந்தோட்டைக்கு அந்த கப்பல் வந்து சில நாள்களை கழித்து செல்வதற்குப் பிறிதொரு முக்கிய காரணம் இருக்கலாம்.

அதாவது, தொண்ணூற்றொன்பது வருட காலம் சீனாவிடம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை, அவ்வப்போது, சீனா இது போன்றே தனது இராணுவ தேவைகளுக்காகவும் பயன்படும் ஆராய்ச்சி கப்பல்களை அனுப்பி வைக்க முயலும். அது போன்றே, தங்களது கடற்படையின் மருத்துவ கப்பல்களையும் அனுப்பி வைக்கலாம். இதுவே, அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள், மூன்றாம் உலகப் பகுதிகளில் அவ்வப்போது செயல்படுத்தி வரும் திட்டமாகும்.

இலங்கையில் சுனாமி பேரனர்த்தம் நிகழ்ந்தபோதும் அண்டை நாடான இந்தியா சில மணி நேரங்களிலேயே தனது கடற்படை மற்றும் வான்படைகள் மூலம் அனைத்து நிவாரண பொருள்களையும் கொண்டு சேர்க்க துவங்கியது. வழக்கம் போலவே, இந்தியா, மனிதாபிமான அடிப்படையிலும், அண்மையில் இருக்கும் நட்பு நாடு என்ற முறையிலும் இந்த உதவிகளை அளித்தது.

ஆனால், ஆற – அமர யோசித்த அமெரிக்கா, தனது சிறப்புக் கடற்படை வீரர்களை நிவாரண பணிகளுக்கு என்று கூறி அனுப்பி வைத்தது. ஆனால், அவர்கள் முக்கியமாக அமெரிக்காவின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நீண்டகால பயன்பாட்டிற்கு உதவும் தகவல்களைச் சேகரிக்கவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று கருதப்பட்டது. தற்போதைய சீனக் கப்பல்களில் விஜயமும் அந்த வகையைச் சார்ந்ததுதான்.

இதில் ஒரு வித்தியாசம். இலங்கையில், அமெரிக்கா தனது என்று கூறிக்கொள்ள எந்தவொரு நிலப்பரப்பும் இல்லை. எனவே, அமெரிக்கா ஏன் இந்தியா உள்ளிட்ட பிற நாடு எதுவுமே, அழையா விருந்தாளியாக தங்களது போர் கப்பல்களை இங்கு அனுப்பி வைக்க முடியாது. ஆனால், ஹம்பாந்தோட்டை எங்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்ட இடம், அதில் தான்தோன்றித்தனமாகச் செயல்பட எங்களுக்கு உரிமை இருக்கிறது என்று வாதிட சீனாவிற்கு வாய்ப்பு உள்ளது. அதனை தனி ஆளாக எதிர்த்து நிற்பதற்கு எந்தவிதத்திலும் இலங்கைக்குத் திராணி இல்லை என்பதே அப்பட்டமான உண்மை.

### யாரும் கேட்கவில்லை

இதுவே, இலங்கையின் இறையாண்மையைக் கேலி செய்து, அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் சீனாவின் செயல்திட்டம் என்று கருதியே, கொழும்பு அரசு ஹம்பாந்தோட்டை விவகாரத்தில் முடிவு எடுத்திருக்க வேண்டும். இதனையும் வலியுறுத்தியே, இந்தியா இந்த விவகாரத்தில், இலங்கை சீனாவிடன் கவனமாக இருக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. அதனை இங்கு யாருமே கேட்கவில்லை. ஏன், அடுத்தடுத்து ஆட்சி செய்து வந்த தென்னிலங்கை அரசுகளையும் அந்த மக்கள் கேட்கவில்லை.

ஹம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டத்தை ஏற்று நடத்த வேண்டும் என்று சந்திரிகா அம்மையார், பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசுகள் ஆகியவை கேட்டுக் கொண்டாலும், அந்தக் கோரிக்கையை இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம், அந்தத் திட்டம் பொருளாதார அளவில் நட்டத்திலேயே முடியும் என்று இந்தியாவின் ஆய்வுகள் தெரிவித்தன. அண்டை நாடான இலங்கையை ஏமாற்றி, அந்தத் திட்டத்திற்கு செய்யும் பெருத்த முதலீட்டை, அதன் மீது சுமத்தி, அதனைக் கடனாளியாக்க இந்தியா தயராக இருக்கவில்லை. இது தான் அப்பட்டமான உண்மை.

இந்தியாவைப் பொறுத்த வரையில், இலங்கையில் தனது இராணுவப் படைத்தளத்தை இங்கு அமைத்துக் கொள்வதற்கு எப்போதுமே விரும்பியதும் இல்லை. அது போன்றே, மூன்றாவது நாடுகளை எதிர்த்துப் போராடவும் இலங்கையைத் தனது இராணுவத் தளமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் இந்தியாவிற்கு எப்போதுமே எண்ணம் இருந்தது இல்லை. அதன் மூலம் நட்பு நாடான, ஏன் உடன்பிறப்பான இலங்கையை அரசியல் மற்றும் இராஜரீக சிக்கல்களில் மாட்டிவிடவும் இந்தியா நினைக்கவில்லை.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஒன்று உள்ளது. இலங்கை அரசிடம் இருந்து, குறிப்பாக அன்றைய ஜனாதிபதி ஜெயவர்தனவின் எழுத்து மூலமான கோரிக்கையை ஏற்று இந்திய அமைதி படை அனுப்பி வைக்கப்பட்டது. தொடர்ந்து பதவிக்கு வந்த பிரேமதாஸா அரசு கேட்டுக்கொண்ட உடனேயே, அமைதிப் படையை இந்தியா திரும்பி அழைத்துக் கொண்டது. அவ்வாறு செய்ய மாட்டேன் என்று அடம் பிடிக்கவில்லை. தற்போது தனது கப்பல் விடயத்தில் சீனா செய்ததை போல் அழிச்சாட்டியம் செய்யவில்லை.

### இரட்டை வேடம்

தற்போதைய சீன கப்பல் விவகாரத்தில், இலங்கை அரசை எதிர்த்து, இந்திய ஆதரவு நிலைமையை சில – பல தமிழ்க் கட்சிகள் எடுத்துள்ளமை வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால், அதுவே நம்பிக்கை தருவதாக இல்லை. காரணம், ஹம்பாந்தோட்டைத் துறைமுகப் பகுதியை, சீனாவிற்கு இலங்கை அரசு நீண்டகால குத்தகை என்று தாரைவார்த்த காலகட்டத்தில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தார்.

தனது ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனாவை விட இந்த விடயத்தில் பிரதமர் ரணிலின் கையே ஓங்கி இருந்தது. இந்தியாவின் கவலைகளை ஒதுக்கி விட்டு, சீனாவிற்கு ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை, குத்தகை என்ற பெயரில் தாரை வார்த்துவிடவே அவர் விரும்பினார். அதற்கு முட்டுக்கட்டை போடுவதாகக் கருதப்பட்ட துறைமுக அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவை, துறை மாற்றினார். ரணதுங்கா, உலகக் கோப்பை கிரிக்கெட் கிண்ணத்தை இலங்கை முதல்முறையாக வெற்றி பெற்ற அணியின் தலைவர் என்பது கொசுறு செய்தி.

அன்று, ரணில் தலைமை, தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற ஆதரவின் காரணமாகவே பதவியில் தொடர முடிந்திருந்தது. அதனைப் பயன்படுத்தி, தமிழ் மக்களுக்குத்தான் கூட்டமைப்பு எதுவும் செய்யவில்லை என்பது ஒரு புறம் இருக்க, தொட்டதிற்கும் வைத்ததிற்கும் எல்லாம், இந்தியாவிடம் கோரிக்கை விடும் கூட்டமைப்பு, ஹம்பாந்தோட்டை விவகாரத்தில் அன்று எப்போதுமே தனது எதிர்ப்பைக் காட்டவில்லை.

இந்த இரட்டை வேடமும் எத்தனை நாளைக்கு? அந்த விதத்தில், சீனா போன்ற விவகாரங்களில், இந்திய ஆதரவு நிலைப்பாட்டில், தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கும், தமிழ் தேசிய கட்சிகளுக்கும் என்ன வித்தியாசம்? ஒன்றுமே இல்லை! அல்லது, ஒன்றுமே புரியவில்லை!

# ஜீ.எஸ்.பி. பிளஸுக்குப் பதிலாக பிரித்தானிய புதிய வரிச் சலுகை!

## இலங்கைக்கும் வாய்ப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகைக்கு பதிலாக பிரித்தானியா அறிமுகப்படுத்தியுள்ள புதிய வர்த்தக யோசனை முறையான டி.சீ.ரீ.சீ முறையின் கீழ் உள்ள நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்காக பிரித்தானியா இந்த வரிச் சலுகை முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனடிப்படையில், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை 80 சத வீதத்துக்கும் மேலான வரிச் சலுகையுடன் பிரித்தானிய சந்தைகளுக்கு அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வரிச் சலுகை தொடர்பாக பிரித்தானிய இன்று அறிவித்துள்ளதுடன் இதன் மூலம் 65 நாடுகளுக்கு பிரித்தானியாவின் வரிச்சலுகை கிடைக்கும்.

இதில் ஆபிரிக்கா, ஆசியா உட்பட பொதுநலவாய நாடுகள் உள்ளடங்கியுள்ளன. இந்த புதிய வரிச் சலுகையின் கீழ் ஓர் ஆண்டுக்கு 7 கோடியே 50 லட்சம் பவுண்ட் பெறுமதியான உணவு, ஆடைகள் உட்பட பல பொருள்களைப் பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் விலகியது. இதன் காரணமாக பிரித்தானியா தற்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் உள்ளடங்காது.

# கிளிநொச்சிப் பெண்ணுக்கு வெளிநாட்டில் அதிர்ஷ்டம்!



கிளிநொச்சியிலிருந்து இந்தியாவின் தமிழ்நாட்டுக்குச் சென்று அகதியாகக் காலத்தைக் கழித்த பெண்ணொருவர் மிகப்பெரிய லொத்தர் பரிசு ஒன்றைப் வென்றுள்ளார்.

அபுதாபியில் நடைபெற்ற லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் இலங்கை நாணயத்தில் 9 கோடியே 82 லட்சம் ரூபா பரிசாக அவர் வென்றுள்ளார்.

தமிழ்நாட்டில் இருந்த அவர், திருமணத்துக்குப் பிறகு, அபுதாபியில் வேலைக்குச் சென்றார். அங்கு வாங்கிய லொத்தர்சீட்டுக்கு 10 லட்சம் அபுதாபி திர்ஹம் (9,82,52,277.32 ரூபா) கிடைத்துள்ளது.

80 லொத்தர் சீட்டுகளை வாங்கிய அருள்சேகரம் செல்வராணி என்ற பெண் விடுமுறைக்காக தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ளார்.

அவரது லொத்தர் பரிசு தொடர்பில் குறித்த லொத்தர் நிறுவனமே தகவல் வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.08.2022இல் வெளியிடப்பெற்றது.